20th NOVEMBER 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 58 | பக்கங்கள் - 12 | editor.uthayam@gmail.com

## எந்தவொரு சமூகத்தையும் புறக்கணிக்க மாட்டோம்!

**அமைச்சர் பிமல் ரத்னாயக்க**

அனைத்து இன, மத மக்களின் அமோக ஆதரவுடன் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவியேற்றுள்ளது.

இந்த நிலையில் எந்தவொரு சமூகத்துக்கோ இனத்துக்கோ பாதிப்புகள் ஏற்படும் வகையில் செயற்பட மாட்டோம். புறக்கணிக்கவும் மாட்டோம் என அமைச்சர் நிமல்

02ம் பக்கம்பார்க்க...

# தேசியப் பட்டியல் விவகாரம் வெடிக்குமா சிலிண்டர்?



## ரவிக்கு எதிராக வழக்கு.ஐ.தே.க.வை கூட்டுமாறு அவசர அழைப்பு!

புதிய ஜனநாயக முன்னணிக்கு கிடைத்த இரு தேசியப் பட்டியல் உறுப்பினர்களை பகிர்ந்து கொள்வதில் ஏற்பட்டிருக்கின்ற பிரச்சனை காரணமாக கட்சிக்குள் மோதல்

02ம் பக்கம்பார்க்க...



## பத்தாவது பாராளுமன்றத்தின் முதல் நாள் செயற்பாடுகள்

### சபாநாயகர் தெரிவு ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனம்!

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது நாள் அமர்வு 2024 நவம்பர் 21ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

முதலாவது அமர்வுநாளில் சபாமண்டபத்தில் இடம்பெறும் செயற்பாடுகளில் பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கே பிரதான பொறுப்புக் காணப்படுகிறது. முதலாவது நாளில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக விசேடமான ஆசன ஒதுக்கீடுகள் எதுவும் இருக்காது என்பதுடன், விரும்பிய ஆசனத்தில் அமர்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும்.

செங்கோல் சபா மண்டபத்தில் வைக்கப்பட்ட பின்னர்

02ம் பக்கம்பார்க்க...



## சபாநாயகர் நிஹால் கலப்பதி? சபை முதல்வர் பிமல்

பாராளுமன்றத்தின் சபாநாயகராக ஹம்மாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிஹால் கலபதி தெரிவு செய்யப்பட உள்ளார். நிஹால் கலபதி 1990 ஆம் ஆண்டு ஜே.வி.பி. சார்பில் முதலாவதாக பாராளுமன்றத்துக்கு தெரிவான உறுப்பினர் ஆவார்.

03ம் பக்கம்பார்க்க...

## தகுதியான எம்.பீ.க்கள், செயலாளர்கள் இருந்தும்

**நியமனங்களில் தொடரும் புறக்கணிப்பு**

### பல்வேறு மட்டத்திலும் அதிருப்தி

நேற்று முன்தினம் பதவியேற்றுக் கொண்ட புதிய அமைச்சுக்களுக்கான செயலாளர்கள் நேற்று நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 18 செயலாளர்களில் எந்தவொரு முஸ்லிம் அதிகாரியும் நியமிக்கப்படாமை குறித்து பல்வேறு மட்டத்திலும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

அமைச்சரவை நியமனத்திலும் முஸ்லிம்கள் எவரும் உள்வாங்கப்படாமை குறித்து சர்ச்சைகள் எழுந்துள்ள நிலையில்

03ம் பக்கம்பார்க்க...

## ஐ.ம.சக்தி தேசிய பட்டியலுக்கு இன்று தீர்வு?

**கட்சிப் பிரமுகர் நம்பிக்கை**

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் விவகாரத்துக்கு இன்று

03ம் பக்கம்பார்க்க...

## வாக்காளர்களுக்கு வழிகாட் டத் தவறியதால் பறி போனது களுத்துறை பிரதிநிதித்துவம்

**சிரேஷ்ட ஊடகவியலாளர் யாஸிர் லஹீர் ஆதங்கம்**



நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம் வாக்காளர்களைக் கொண்ட களுத்துறை மாவட்டத்தில் ஒரு பிரதிநிதி கூட வெற்றி பெறாமல் இருப்பதற்கு முஸ்லிம் சமூகத்திற்கு சரியான வழிகாட்டல்களை வழங்கும் அழுக்கக்

02ம் பக்கம்பார்க்க...

## நியமன புறக்கணிப்பு தொடர்பில் வெளிநாட்டு தூதரகங்கள் கரிசனை

அமைச்சரவையிலோ, செயலாளர் நியமனத்திலோ முஸ்லிம்கள் நியமிக்கப்படாமை குறித்து இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் கரிசனை காட்டியுள்ளதாக இராஜதந்திர தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக ஊடகங்களில் வெளியான செய்திகள் தொடர்பில்,

03ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

உதயம் பத்திரிகையை உங்கள் பார்வைக்கு பெற்றுக்கொள்ள
இங்குள்ள QRஐ Scan செய்து எமது வட்ஸ்அப் குழுமத்தில் இணைந்து கொள்ளுங்கள்
www.uthayam.lk

## வாக்காளர்களுக்கு...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

குழு ஒன்று இல்லாமையே காரணம் என மாவட்டத்தின் புத்திஜீவிகள் மட்டத்தில் தெரிவிக்கப்படுகின்றது.

சிரேஷ்ட ஊடகவியலாளரும் சமூக ஆர்வலருமான அஷ்ஷெய்க். யாஸிர் லாபிர் தேர்தல் முடிவுகள் பற்றி கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு குறிப்பிட்டார். நடுநிலையாக பக்க சார்பில்லாமல் செயல்படுகின்ற ஒரு அமுக்கக் குழு சமூகத்தில் செயற்பட்டிருந்தால் மூன்றாவது முறையும் முஸ்லிம் சமூகம் களுத்துறை மாவட்ட பிரதிநிதித்துவத்தை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது என்றும் அஷ்ஷெய்க். யாஸிர் தெரிவித்தார். பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தின் பெறுமதியை உணரத் தவறியதனால் எமது மாவட்டத்தின் பிரதிநிதித்துவத்தை இழந்தோம். மாவட்டத்தின் உலமாக்கள் புத்திஜீவிகள் படித்தவர்கள் அரசியல் பிரமுகர்கள் பல நூறு பேர் இருந்தும் வாக்காளர்களுக்கு வழிகாட்ட தவறிட்டார்கள் என்றும் அரசியல்வாதிகளுக்கு நமது விருப்பப்படி செயல்பட இடம் அளித்தார்கள் என்றும் அஷ்ஷெய்க். யாஸிர் லாபிர் தெரிவித்தார்.

நடந்து முடிந்த தேர்தலில் களுத்துறை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட இப்திகார் ஜெமீல் 41,022 வாக்குகளை பெற்றதோடு, தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட எம் ஏ அரீஸ் 41,071 வாக்குகளையும் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை சேர்ந்த எம் எஸ் ஏ அஸ்லம் 14,379 வாக்குகளையும் பெற்றார். இத் தேர்தலில் முஸ்லிம் பிரதிநிதிகள் எவரும் தெரிவாகாததற்கு மாவட்டத்தின் முஸ்லிம் அரசியல் கட்சி தலைவர்களிடையே ஒற்றுமை இல்லாமையே காரணம் என முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பொறியியலாளர் எம் எம் அம்ஜத் தெரிவித்தார்.

களுத்துறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் தொடராக மூன்று முறை பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை இழந்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## பத்தாவது...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

பாராளுமன்றம் கூட்டப்படவேண்டிய நாள் மற்றும் நேரம் அடங்கிய ஜனாதிபதியின் அறிவிப்பு வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் வாசிக்கப்படுவது முதலாவது விடயமாக சபையில் முன்னெடுக்கப்படும்.

அதன் பின்னர் அரசியலமைப்பின் 64(1) உறுப்புரை மற்றும் நிலையியற் கட்டளை இலக்கம் 04, 05 மற்றும் 06 ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபாநாயகர் தெரிவு, சபாநாயகரின் பதவிச்சத்தியம், பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிச்சத்தியம் அல்லது உறுதியுரை அதன் பின்னர் பிரதி சாபாநாயகரும் குழுக்களின் தலைவரும், குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகியோரின் தெரிவுசெய்வது இடம்பெறும்.

அதனை அடுத்து பாராளுமன்றம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு மீண்டும் மு.ப 11.30 மணிக்கு அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அவர்களினால் முன்வைக்கப்படும்

அரசியலமைப்பின் 33 (அ) உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்ற கூட்டத்தொடர் ஒன்றின் ஆரம்பத்தில் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கும், அரசியலமைப்பின் 33 (ஆ) உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்தின் வைபவரீதியான அமர்வுகளில் தலைமை தாங்குவதற்கும் ஜனாதிபதிக்கு அதிகாரம் காணப்படுகின்றது.

இதன்போது ஜனாதிபதியினால் அவரது அரசாங்கத்தின் எதிர்கால நோக்கு தொடர்பிலான விளக்கமான பகுப்பாய்வு கொள்கைப் பிரகடனத்தின் ஊடாக பாராளுமன்றத்துக்கும் மக்களுக்கும் முன்வைக்கப்படும்.

## தேசியப்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ஏற்பட்டுள்ளது.

கடந்த தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி மற்றும் கூட்டுக் கட்சிகள் இணைந்து புதிய ஜனநாயக முன்னணியில் போட்டியிட்டபோது அவர்களுக்கு இரண்டு தேசிய பட்டியல் உறுப்பினர்களே கிடைக்கப் பெற்றது.

இக் கட்சி முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்கவுக்குரிய கட்சியாகும். எனவே கட்சி தீர்மானம் எதுவும் எடுக்காமல் ரவி கருணா நாயக்க தனது பெயரை தேசிய பட்டியல் உறுப்பினராக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

தேர்தல் ஆணைக்குழு அவருடைய பெயரை வர்த்தமானியில் அறிவித்துள்ளது. இந்த நிலையில் கட்சிக்குள் பெரும் மோதல் ஏற்பட்டு இப்போது ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து ரணில், ரவி கருணா நாயக்காவுக்கு எதிராக வழக்கு தொடர்வதாக தெரிவிக்கப்படுகிறது. தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி ரவி கருணா நாயக்கா நியமனம் பெறுவதை பலமாக எதிர்த்துள்ளார்.

கட்சியின் செயலாளர் ஷாமிலா பெரேரா கடந்த பதினெட்டாம் திகதி, ரவி கருணா நாயக்காவை தேசிய பட்டியல் உறுப்பினராக தேர்தல் ஆணை குழுவுக்கு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஐ.தே.க செயற்குழுவை உடனடியாக கூட்டுமாறு செயற்குழு உறுப்பினர் கலாநிதி லஸந்த குணவர்தன கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

தேசிய பட்டியல் உறுப்பினராக தன்னை நியமித்துக் கொண்டதன் மூலம் ரவி கருணாநாயக்க யாப்புக்கு முரணாக செயற்பட்டுள்ளார் என்றும் இது குறித்து கலந்துரையாடி உரிய தீர்மானங்களை எடுக்கும் வகையில் கூட்டத்தை கூட்டுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## எந்தவொரு...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ரத்னாயக்க தெரிவித்தார்.

ஊடகவியலாளரொருவர் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளித்த அவர் மேலும் கூறுகையில் முழு வடக்கிலும், கல்முனை, சம்மாந்துறை, நுவரெலியா உட்பட தமிழ் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளிலும் கணிசமான வாக்குகள் தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்தன.சிங்கள செறிந்து வாழும் பகுதிகளிலும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் வெற்றிக்கு பாரிய பங்களிப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

எனவே சிறு பிரச்சினைகளை பெரிதாக்காது அனைவரும் ஒன்றுபட்டு நாட்டை முன்னேற்ற அர்ப்பணிப்புடன் பாடுபட முன்வர வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.







# அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....

(இப்னு தவ்பீக் ஆலீம்)

## மிக்க கண்ணியவான் யார்?

மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஒரு ஆண் மற்றும் ஒரு பெண்ணிலிருந்துதான் சிருஷ்டித்தோம். பின்னர் ஒருவர் மற்றவரை அறிந்து கொள்ளும் பொருட்டு உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆதலால் உங்களில் ஒருவர் மற்றவரை விட மேலென்று பெருமை பாராட்டிக் கொள்வதற்கில்லை. எனினும்) உங்களில் எவன் மிகவும் பயபக்தியடையவனாக இருக்கின்றானோ அவன்தான் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிக்க கண்ணியவானாவான். நிச்சயமாக அல்லாஹ் (யாவரையும்) நன்கறிந்தோனும் நன்கு தெரிந்தோனுமாக இருக்கின்றான்." (49:13)

## பயபக்தியுடையோரின் நிலை

"நிச்சயமாக பயபக்தியுடையவர்கள் சுவனபதிகளிலும், நீரருவிகளிலும் இருப்பார்கள். அவர்கள் தங்கள் இறைவன் அவர்களுக்குக் கொடுப்பதைத் (திருப்தியுடன்) பெற்றுக் கொள்வார்கள். நிச்சயமாக அவர்கள் இதற்கு முன்னர் நன்மை செய்தோராகவே இருந்தார்கள்." (51:15-16)

"அவர்கள் இரவில் வெகு சொற்ப (நேர)மே நித்திரை செய்வார்கள். அவர்கள் விடியற்காலையில் (எழுந்து இறைவனை வணங்கி, தங்களிறைவனிடம்) மன்னிப்புக் கோரிக் கொண்டிருப்பார்கள். அவர்களுடைய பொருள்களில் வாய் திறந்து யாசகம்) கேட்போருக்கும், கேட்காதோருக்கும் பாகமுண்டு (பலருக்கும் தானம் செய்வார்கள்)" (51:17-21)

"(பாவத்திலிருந்து விலகி) அல்லாஹ்வின் பக்கம் நீங்கள் விரைந்து செல்லுங்கள். நிச்சயமாக நான் அவனிடமிருந்து உங்களுக்குத் தெளிவாகவே அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவனாக இருக்கிறேன். (வணக்கத்திற்காக) அல்லாஹ்வுடன் மற்ற எந்தப் (போலி) ஆண்டவனையும் சேர்க்காதீர்கள். நிச்சயமாக நான் அவனிடமிருந்து உங்களுக்கு (இதைப் பற்றியும்) தெளிவாக அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவனாக இருக்கின்றேன்.(51:50-51)

"வானங்கள் பூமியிலுள்ளவைகள் யாவும் அல்லாஹ்வுக்குரியனவே. ஆகவே தீமை செய்வோருக்கு அவர்களுடைய (தீவினைக்குத் தக்கவாறு (அவன் தீமையைக்) கொடுக்கிறான். நன்மை செய்தோருக்கு நன்மையை கூலியாக கொடுக்கிறான்."" (53:31)

(நன்மை செய்யும்) அவர்கள் (அறியாமல் ஏற்பட்டுவிடும்) அற்பமான தவறுகளைத் தவிர மற்ற பெரும் பாவங்களிலிருந்தும் மானக்கேடான விஷயங்களிலிருந்தும் விலகி இருப்பார்கள். நிச்சயமாக உமது இறைவன் மன்னிப்பதில் மிக்க தாராளமானவன்" (53:32)

"(மனிதர்களே!) நீங்கள் உங்கள் இறைவனின் மன்னிப்பின்பாலும், சுவனபதியளவிலும் விரைந்து செல்லுங்கள். அதன் விஸ்தீரணமோ வானம் பூமியின் விஸ்தீரணத்தைப் போல் இருக்கின்றது. அது அல்லாஹ்வையும் அவனுடைய தூதர்களையும் விசுவாசம் கொண்டவர்களுக்காகவே சித்தப்படுத்தப்பட்டிருக்கின்றது. அது அல்லாஹ்வுடைய அருளாகும். அதனை அவன் விரும்பிய (நல்லவர்)களுக்கே அவன் கொடுக்கின்றான். அல்லாஹ் மகத்தான அருளாளன்." (57:21)

(பொதுவாகப்) பூமியிலோ அல்லது (சொந்தமாக உங்களுக்கு ஏற்படக்கூடிய) எந்தக் கஷ்டமும் நஷ்டமும்) அவற்றை நாம் சிருஷ்டிப்பதற்கு முன்னதாகவே லவ்/ஹல் மஹ்பூல் என்னும் புத்தகத்தில் (பதியப்பட்டு) இல்லாமலில்லை. நிச்சயமாக இது அல்லாஹ்வுக்கு மிக்க எளிதானதே. உங்களை விட்டுத் தவறிப் போனதைப் பற்றி நீங்கள் கவலை கொள்ளாதிருக்கவும். (இதனை உங்களுக்கு அறிவிக்கிறான்) அல்லாஹ் கர்வம் கொண்டு பெருமையடிப்போர் எவரையும் நேசிப்பதில்லை."" (57:22,23)

"எவர்கள் உலோபித்தனம் செய்து (மற்ற) மனிதர்களையும் உலோபித்தனம் செய்யும்படி தூண்டுகிறார்களோ அவர்களுக்கு கடினமான வேதனையுண்டு. ஆகவே அல்லாஹ்வுடைய கட்டளைகளை எவன் புறக்கணிக்கின்றானோ அது அவனுக்குத்தான் நஷ்டத்தை உண்டு பண்ணும் (அல்லாஹ்வுக்கு யாதொரு நஷ்டத்தையும் உண்டுபண்ணாது) ஏனென்றால் நிச்சயமாக அல்லாஹ்தான் பெரும் சீமானாகவும், பெரும் புகழுடையவனாகவும் இருக்கின்றான்."(57:24)

உதயம் பத்திரிகையை உங்கள் பார்வைக்கு பெற்றுக்கொள்ள
இங்குள்ள QRஐ Scan செய்து எமது வட்ஸ்அப் குழுமத்தில் இணைந்து கொள்ளுங்கள்
www.uthayam.lk

## ஐ.ம.ச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெறவுள்ள கூட்டத்தில் தீர்க்கமான முடிவுகள் எட்டப்படுமென கட்சியின் முக்கிய பிரமுகரொருவர் உதயத்திற்கு தெரிவித்தார்.

கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தேசிய பட்டியல் உறுப்பினராக வர்த்தமானியில் பெயர் குறிப்பிடப் பட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி நிஸாம் காரியப்பர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் முத்து முஹம்மது ஆகியோர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர். எஞ்சியுள்ள இரண்டு உறுப்பினர்களின் நியமனம் தொடர்பாகவே இன்றைய கூட்டத்தின் போது தீர்மானம் மேற்கொள்ளப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சபாநாயகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர் ஹம்மாந்தோட்டை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி தெரிவாகி இருந்தார். அதே நேரம் சபை முதல்வராக அமைச்சர் பிமல் ரத்னாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். இவர் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சராக பணிபுரிகிறார்.

## நியமன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில வெளிநாட்டு தூதரகங்கள் சம்பந்தப்பட்ட ஊடகங்களை தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களை கோரியுள்ளதாகவும் இந் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## தகுதியான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய அமைச்சு செயலாளர் நியமனத்திலும் புறக்கணிப்பு இடம்பெற்றுள்ளமை நிலைமையை மேலும் சிக்கலாக்கியுள்ளது.

இதேவேளை அரசின் இந்த புறக்கணிப்பு தொடர்பில் அரசியல்வாதிகள்,சமூக ஆர்வலர்கள், புத்திஜீவிகள் உட்பட சமூகத்தின் பல தரப்பட்டோர் விமர்சனங்களை முன் வைத்துள்ளனர்.கபே அமைப்பின் முன்னாள் செயற்பாட்டாளர்.

கீர்த்தி தென்னக்கோன் இது குறித்து கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

முக்கியமான 74 பதவிகளில் முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சரவை, அமைச்சு செயலாளர் பதவிகள் என இது தொடர்வதாகவும் சுட்டிக்காட்டியு ள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி எம். பீ.ஹேஷா விதானகேயும் இது குறித்த விமர்சனங்களை முன்வைத் துள்ளார்.

இன்றைய அமைச்சு செயலாளர் நியமனத்தில் இரண்டு தமிழர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

தற்போது இத் தரத்தில் உள்ள 29 அதிகாரிகளுள் நான்கு முஸ்லிம் அதிகாரிகளும் அடங்கியுள்ளனர்.

12 வது இடத்தில் எம்.எம். நஸீரும்,18 வது இடத்தில் வை.எல்.எம் .நவவியும்,21 வது இடத்தில் எம்.எம்.நயிமுதீனும் 22 வது இடத்தில் எம்.எம். நேளபரும் இருப்பதாக பொது நிர்வாக அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.




www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 NOVEMBER 11 - MONDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# சிறுபான்மையினரின் உணர்வுகளுக்கு அரசு மதிப்பளிக்க வேண்டும்

நடந்து முடிந்த பொது தேர்தலில் நாட்டு மக்கள் 159 தொகுதிகளில் பெரும்பான்மை வாக்குகள் அளித்து தேசிய மக்கள் சக்தியை ஆட்சியில் அமர்த்தியுள்ளனர். நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் திசைகாட்டிக்கு வாக்களித்து வரலாற்று ரீதியான வெற்றியை வழங்கி சாதனை புரிந்துள்ளனர். இந்த வெற்றிக்கு தனியாக யாருக்கும் உரிமை கோர முடியாது ஏனெனில் ஒருபோதும் இல்லாத நிலையில் தமிழ் மக்கள் திசைகாட்டிக்கு வாக்களித்து தமது ஆதரவை தெரிவித்துள்ளனர்.

வடக்கிலும் மலையகத்திலும் வாழும் தமிழ் மக்கள் தமது ஆதரவை முழுமையாக வழங்கி இருக்கிறார்கள். தமிழ் மக்கள் பிரிவினை போராட்டத்தை ஆரம்பித்த பின் வடக்கு கிழக்கில் கூடுதலாக தமிழ் கட்சிகளுக்கே ஆதரவு வழங்கி வந்தனர். இம்முறை வடக்கில் அந்த நிலை மாறி நாட்டின் தேசிய கட்சிகளில் ஒன்றான தேசிய மக்கள் சக்தி மீது நம்பிக்கை வைத்து வாக்களித்து பிரதிநிதிகளை பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இதற்கு கட்சியும் நேச கரம் நீட்டி இம்மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கும் வகையில் அதன் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். வடக்கில் தன் கட்சியில் வெற்றி பெற்றவர்களுக்கு அமைச்சரவையில் இடம் அளித்து தேசிய உயிரோட்டத்தில் அந்த மக்களையும் பயணிக்க செய்வது தேசிய மக்கள் சக்தியின் பிரதான பொறுப்பாகும்.

திங்களன்று பதவியேற்ற அமைச்சரவையில் வடக்கை சேர்ந்தவர்கள் மட்டுமன்றி முஸ்லிம்களின் பிரதிநிதி ஒருவர் கூட இடம்பெறாமை குறித்து பல்வேறு விமர்சனங்கள் எழுந்த வண்ணம் உள்ளன. வழமைக்கு மாறாக மக்கள் தேசிய மக்கள் சக்தி மீது நம்பிக்கை வைத்து வாக்களித்துள்ளனர்.

இம்முறை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள 18 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களில் எட்டு பேர் தேசிய மக்கள் சக்தி போட்டியிட்டவர்கள் ஆவார்கள். மாத்தறையைப் போன்று சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரு மாவட்டத்திலும் கூட முஸ்லிம் ஒருவர் வெற்றி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. திசை காட்டி வெற்றி பெற்ற சில தேர்தல் மாவட்டங்களில் திசைகாட்டிக்கு வாக்களித்த கணிசமானவர்கள் முஸ்லிம் இளைஞர்கள் ஆவர்கள். முஸ்லிம்கள் பாரம்பரியமாக ஆதரவு வழங்கும் கட்சிகளை புறம் தள்ளிவிட்டு தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு வழங்கியிருக்கிறார்கள்.

முஸ்லிம்கள் இதுவரை ஆதரவு வழங்கி வந்த ஐக்கிய மக்கள் சக்தி ஒரு சில மாவட்டங்களில் மிகக் குறைந்த வாக்குகளை பெற்று தெரிவாகி இருப்பதானது முஸ்லிம்களின் ஆதரவு தேசிய மக்கள் சக்திக்கு வழங்கப்பட்டிருப்பதனை உணர்த்தியுள்ளது. இந்தப் பின்னணியில் தேசிய மக்கள் சக்தி, சுதந்திரம் கிடைத்தது முதல் பதவிக்கு வந்த அரசாங்கங்களில் குறைந்த பட்சம் முஸ்லிம் ஒருவருக்காவது அமைச்சுப் பதவி வழங்கி இருப்பதனை கவனத்தில் எடுக்க வேண்டும். அதன் பிரகாரம் முஸ்லிம்களில் ஒருவருக்காவது அமைச்சுப் பதவி வழங்குவது குறித்து மீள் பரிசீலனை செய்ய வேண்டும்.

தேசிய ரீதியில் முஸ்லிம் சமூகத்தையும் வடக்கு வாழ் சமூகத்தையும் தம்முடன் இணைத்துக் கொள்வதற்கு இந்தத் தீர்மானம் மிக முக்கியமானதாக இருக்கும். ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க இது சம்பந்தமாக தமது கட்சியோடு கலந்துரையாடி ஒரு சாதகமான முடிவை எடுப்பது சால சிறந்தது என்பதே எமது கருத்தாகும்.

# புதிய அமைச்சரவை



ஜனாதிபதி செயலகத்தில் புதிய அமைச்சரவை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டது.
புதிய அமைச்சரவை அமைச்சர்கள் விபரங்களை கீழே வருமாறு,

பிரதமர் ஹரிணி அமரசூரிய– கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில்கல்வி அமைச்சு
விஜித ஹேரத் – வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் தொழில்
சந்தன அபேரத்ன – பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள்
ஹர்ஷன நாணயக்கார– நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு
சரோஜா சாவித்திரி போல்ராஜ்– மகளிர் மற்றும் சிறுவர் விவகாரம்
லால் காந்த – கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்பாசனம்
அநுர கருணாதிலக – நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு
ராமலிங்கம் சந்திரசேகர் – கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள்
உபாலி பன்னிலகே – கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை
சுனில் ஹந்துன்னெத்தி – கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி
ஆனந்த விஜேபால – பொதுமக்கள் பாதுகாப்பு, பாராளுமன்ற அலுவல்கள்
பிமல் ரத்னாயக்க – போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள்
ஹினிதும சுனில் செனவி – புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள்
நலிந்த ஜயதிஸ்ஸ – சுகாதாரம், வெகுசன ஊடகம்
சமந்த வித்யாரத்ன – பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு
சுனில் குமார கமகே – விளையாட்டு, இளைஞர் விவகாரம்
வசந்த சமரசிங்க – வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி
கிருஷாந்த சில்வா அபேசேன – விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்
அனில் ஜயந்த பெர்னாண்டோ – தொழில்
குமார ஜயகொடி – வலுசக்தி
தம்மிக்க பட்டபெந்தி – சுற்றாடல்

# அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்கள்



புதிய பிரதமரின் செயலாளர், அமைச்சரவையின் செயலாளர் உட்பட 18 அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக்க சனத் குமாநாயக்க தலைமையில் இன்று (19) ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

அவர்களின் பெயர் விபரம் வருமாறு,

01. பிரதமரின் செயலாளர் – பீ.பீ.சபுதந்திரி
02. அமைச்சரவையின் செயலாளர் – டபிள்யூ. எம்.டீ.ஜே.பெர்னாண்டோ
03. சீ.கே.பெரேரா – போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் , துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானத்துறை அமைச்சு
04. கே.எம்.எம்.சிறிவர்தன – நிதி ,திட்டமிடல், பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
05. ஜே.எம்.திலகா ஜயசுந்தர – கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு
06. ஏ.எம்.பீ.எம்.பி.அத்தபத்து – புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு
07. பீ.கே.பிரபாத் சந்திரகீர்த்தி – பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு
08. எச்.எஸ்.எஸ்.துய்யகொந்த – பாதுகாப்பு அமைச்சு
09. டீ.டபிள்யூ.ஆர்.டீ.செனவிரத்ன – பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு
10. யூ.ஜீ.ரஞ்சித் ஆரியரத்ன – நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சு
11. பேராசிரியர்.கே.டீ.எம். உதயங்க ஹேமபால – வலுசக்தி அமைச்சு
12. எஸ்.ஆலோக பண்டார – பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
13. எஸ்.எம்.பியதிஸ்ஸ – தொழில் அமைச்சு
14. ஏ.விமலேந்திரராஜா – வர்த்தக,வாணிப ,உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு
15. டீ.பி.விக்ரமசிங்ககே – விவசாயம்,கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு
16. எம்.ஜீ.எஸ்.என்.களுவெவ – கல்வி,உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
17. ஏ.எச்.எம்.யூ – அருண பண்டார – இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு
18. அருணி ரணராஜா – வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு

# சகல சமூகத்தினரினதும் நலன் கருதி ஒன்றாகப் பயணிப்போம்

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் நன்றி தெரிவிப்பு



"நடந்து முடிந்த பொதுத் தேர்தலில்,இறைவன் அருளால் கண்டி மாவட்டத்தில் எனக்கு வாக்களித்து, மீண்டும் எனது வெற்றியை உறுதி செய்ததோடு, அங்கு ஐக்கிய மக்கள் சக்தியில் முதலாவது தெரிவுக்கான விருப்பு வாக்கினால் என்னை கண்ணியப்படுத்தியுமுள்ளீர்கள்". தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள நன்றி தெரிவிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டு ள்ளதாவது,

இந்த வெற்றிக்காக எனக்கு ஆதரவளித்த கண்டி மாவட்ட உலமாப் பெருமக்கள், ஏனைய சமயத் தலைவர்கள், அரச மற்றும், தனியார் நிறுவன அலுவலர்கள், தாய்மார்கள், சகோதர சகோதரிகள் அதற்கும் அப்பால் பொதுவாக எனது அரசியல் செல்நெறியோடு ஒன்றித்துப் பயணிக்கின்ற சகோதர சமூகத்தவர்களான சிங்கள, தமிழ், கிறிஸ்தவ மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாவதாக. எனது கடந்தகால அரசியல் பணிகளிலும், என்னிலும் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து கணிசமான வாக்குகளை எனது வெற்றிக்காக வழங்கியுள்ளீர்கள்.

இந்தத் தேர்தலில் எமது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை (திகாமடுல்ல), மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் தனித்து மரச் சின்னத்தில் போட்டியிட்டது. இந்த இரு மாவட்டங்களிலும் வாக்களித்து பாராளுமன்ற பிரதிநிதிகளாக ஒவ்வொருவர் வெற்றிபெறவும், அவற்றில் கட்சிக்கு அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளினூடாக தேசியப் பட்டியல் பிரதிநிதி யொருவர் நியமிக்கப்படவும் வழிவகுத்து, எமது தனித்துவம் காத்த கட்சியின் வாக்காளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் ஒவ்வொருவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், தேர்தலில் வெற்றி, தோல்வி என்பன இயல்பானவை. நமக்கு அவற்றை ஏற்றுக்கொள்ளக் கூடிய மனப் பக்குவம் தேவை. இந்த வெற்றி - தோல்விகள், தலைமைத்துவக் கட்டுக்கோப்புடன் கையாளப்பட வேண்டும். ஒற்றுமையுடன் அரசியல் பாதையில் தொடர்ந்தும் பயணிக்க எத்தகைய தடைகளையும், முரண்பாடுக ளையும் உருவாக்கிவிடக்கூடாது என்ற புரிதலுடன் அனைவரையும் அரவணைத்துக்கொண்டு நாட்டினதும், இங்கு வாழ்கின்ற சகல சமூகத்தினரினதும் நலன் கருதி ஒன்றாகப் பயணிப்போம் என்று கூறினார்.

# 30 வருடங்களின் பின்னர் கண்டி

## ஹேவாஹெட்டையிலிருந்து எம்.பி ஒருவர் தெரிவு





( ரஷீத் எம்.றியாழ் )

கண்டி மாவட்டத்தின் தமிழ் முஸ்லிம்கள் பெருமளவில் வாழும் ஹேவாஹெட்ட தேர்தல் தொகுதியிலிருந்து 30 வருடங்களின் பின்னர் ஒருவர் பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளார். கண்டி கலஹா பிரதேசத்தைச் சேர்ந்த ஜகத் மனுவர்ண என்பவரே இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார். நீண்ட இடைவெளியின் பின்னர் இப்பிரதேச மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து பாராளுமன்றத்தில் குரல் எழுப்ப இங்கிருந்தே ஒரு பிரதிநிதி தெரிவாகி இருப்பது குறித்து மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

# ஆளுந்தரப்பில் சிறுபான்மை பிரதிநிதியாக பைசல் தெரிவு

(எம்.எச்.எம்.சியாஜ், எம்.யூ.எம். சனூன்)

பத்தாவது பாராளுமன்றத்திற்கு புத்தளம் மாவட்டத்திற்கான சிறுபான்மை பிரதிநிதியாக தேசிய மக்கள் சக்தியில் இம்முறை முதன்முறையாக போட்டியிட்ட எம்.ஜே. எம் பைசல் 42,939 விருப்பு வாக்குகளை பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். புத்தளம் மாவட்டத்தில் இருந்து எட்டு பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு இம்முறை 24 அரசியல் கட்சிகளும்,15 சுயேட்சைக் குழுக்கள் சார்பாக 429 வேட்பாளர்களும் போட்டியிட்டனர். அத்தோடு புத்தளம் மாவட்டத்தில் 663 673 பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர்.

தேசிய மக்கள் சக்தி 2,39,576 வாக்குகளை பெற்று ஆறு ஆசனங்களை பெற்றது. இது 63.10 சதவீதம். அத்தோடு ஐக்கிய மக்கள் சக்தி 65,679 வாக்குகளை பெற்று 2 ஆசனங்களை பெற்றது. இது 17.30 சதவீதமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.





# கண்டி மாவட்டத்தில் மூன்று முஸ்லிம் உறுப்பினர்கள்



நடந்து முடிந்த தேர்தலில் கண்டி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பில் இரண்டு உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் உறுப்பினரொருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதனடிப்படையில்

**01.ரியாஸ் பாருக்** (வாடக்குகள் 64043- **தேசிய மக்கள் சக்தி**


**02.முஹம்மத் பஸ்மின்** (வாடக்குகள் 57716 **தேசிய மக்கள் சக்தி**)

**03.ரவூப் ஹக்கீம்** (வாக்குகள் 30883 **ஐக்கிய மக்கள் சக்தி**)

# ரயிலுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் தந்தை பலி, மகன் காயம்

(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)

அனுராதபுரம் - ஹபரணை பெல்லங்கடவல பகுதியில் உள்ள ரயில் கடவையில் மோட்டார் சைக்கிள் ஒன்று ரயிலுடன் மோதி விபத்திற்குள்ளானதில் தந்தை உயிரிழந்துள்ளதுடன் மகன் காயமடைந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். அனுராதபுரம் கெக்கிராவ பகுதியைச் சேர்ந்த 69 வயதுடைய தந்தையே உயிரிழந்துள்ளார்.



விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த மகன் காயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக தம்புள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை ஹபரணை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மத்ரஸத்துல் தாஹிரிய்யா குர்ஆன் மத்ரஸாவின் வருடாந்த மீலாத் விழா

(பீ.எம் முக்தார்)

பேருவளை மாளிகாஹேனையில் இயங்கும் மத்ரஸத்துல் தாஹிரிய்யா குர்ஆன் மத்ரஸாவின் வருடாந்த மீலாத் விழா அதிபர் ஹாபிஸ். முஹம்மத் மர்ஜான் தலைமையில் இடம்பெற்றது. அஷ்ஷெய்ஹ். மௌலவி ஸக்கி அஹ்மத் பின் அஷ்ஷெய்ஹ் காலிப் அலவி ஆலிம் ஹாஜியார் அலவியதுல் காதிரி பிரதம அதிதியாக கலந்து கொண்டார். கொழும்பு அஸ்வாத் அல்-பாஸி அரபுக் கல்லூரி முதல்வர் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி அஹ்மத் ஸாபி (மஹ்ழரி) விஷேட பேச்சாளராக கலந்து கொண்டிருந்தனர். மாணவர்களது நிகழ்ச்சிகளும் இங்கு மேடையேற்றப்பட்டன. அலவிய்யா தரீக்காவின் மூத்த முரீதீன்களில் ஒருவரான சமூக சேவையாளர் மர்ஹூம் தாஹிர் ஹாஜியாரின் ஞாபகார்த்தமாக ஸ்தாபிக்கப்பட்ட இக் குர்ஆன் மதரஸாவில் நூற்றுக்கு மேற்பட்ட சிறார்கள் மார்க்கக் கல்வி பெற்று வருகின்றனர். மாளிகாஹேனை பகுதியில் மர்ஜான் ஹாபிஸ் இந்த குர்ஆன் மத்ரஸாவை சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதை பலரும் இங்கு பாராட்டினார்கள். இவ்விழாவில் கலீபதுர் ரிபாயி







மௌலவி ஏ.ஸி அஹ்மத் பளீல் (காஸிமி), மௌலவி தீன் முஹம்மத் (மஹ்ழரி), மௌலவி எம்.எஸ்.எம் பாஸில் (அஷ்ரபி), மௌலவி உமர் பாஷரூக் (மஹ்ழரி), அல்-ஹாஜ் பிர்தௌஸ் தாஹிர் உட்பட பல பிரமுகர்களும் மற்றும் அலவிய்யா இளைஞர் முன்னணி உறுப்பினர்கள், பெற்றோர்கள் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# புது யுகத்தை நோக்கிப் பயணிக்க அனைவரையும் அன்போடு அழைக்கின்றேன்

## வெற்றி உரையில் ஹிஸ்புல்லாஹ் அழைப்பு





தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் மக்களுக்கு விஷேட உரை நடைபெற்று முடிந்த பாராளுமன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முதன்மை வேட்பாளராக போடியிட்டு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்ட எம். எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் கடந்த வெள்ளிக்கிழமை (15) ஜும்ஆ தொழுகையின் பின்னர் பொதுமக்களுக்கு விஷேட உரை நிகழ்த்தினர்.

காத்தான்குடி மெத்தைப்பள்ளி வாயல் இடம்பெற்ற இவ் விஷேட உரையில் “நீங்கள் விரும்பும் மாற்றத்தை வழங்கி ஒரு புது யுகத்தை நோக்கி பயணிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்” காத்தான்குடி, ஏறாவூர் மற்றும் கல்குடா தொகுதி மக்களுக்கு விஷேட நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் இளைஞர்கள் என்மீது வைத்த நம்பிக்கையைப் பாதுகாப்பேன் என தெரிவித்ததுடன் மார்க்க ரீதியான முரண்பாடுகளைக் களைந்து பயணிப்பதுடன் புதிய யுகத்துக்கு ஏற்றவாறு எங்களை மாற்றிக்கொண்டு சேவையாற்றுவோம் என தெரிவித்தார்.

இந் நிகழ்வில் ஏறாவூர் நகரசபை முன்னாள் தவிசாளர் எம்.எஸ்.எம். நளீம் கலந்துகொண்டதுடன் விஷேட து ஆப் பிரார்த்தனைகளும் இடம்பெற்றது.

# புத்தளம் மாவட்டத்தில் எட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு

**(எம்.எச்.எம்.சியாஜ், எம்.யூ.எம். சனூன்)**

நடைபெற்று முடிந்த பத்தாவது பாராளுமன்றத்திற்கு புத்தளம் மாவட்டத்தில் இருந்து எட்டு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய மக்கள் சகதி சார்பாக ஆறு உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக இரண்டு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இவர்கள் பெற்றுக் கொண்ட விருப்பு வாக்குகளானது.

**தேசிய மக்கள் சக்தி**

01)அபயரத்ன ஹேரத் முதியன்சலாகே ஹரிஸ்சந்ர அபயரத்ன - 113334.
02)அஜித் கிஹான் - 58 183.
03) ஹேரத் முதியன்சலாகே கயான் ஜானக குமார - 51233.
04)விஜேசிங்க முதியன்சலாகே ஹிருனி மதுஷா விஜேசிங்க - 44057.
05) என்டன் சரத் ஜயக்கொடி - 43907.
06) மொஹமட் ஜலீல் மொஹமட் பைசல்- 42939.

**ஐக்கிய மக்கள் சக்தி**

01) அப்புஹாமி மாகவிட ஆரதொன் ஹெக்டர் ஹைஜினஸ் - 25755.
02) மிஹிந்து குலசூரிய வீபெத்துகே ஜனத் சித்ரலால் பெர்னான்டோ - 18916

# அஜ்மீர் தேசிய பாடசாலையின் இரண்டு மாடிக்கட்டிடம் தீப்பிடிப்பு

**(உக்குவளை ஜெலீல்)**



உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலையின் இரண்டு மாடி விஞ்ஞான ஆய்வுகூட கட்டிடம் கடந்த வெள்ளிக்கிழமையன்று (15) தீடீரென தீப்பற்றி எரிந்தது.

உடனடியாக இதுபற்றி அறிந்த இப்பாடசாலை அதிபர் சரூக் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க மற்றும் பழைய மாணவர் சங்க குழுவினரும் பாடசாலை நலன் விரும்பிகள் எனப்பலரும் இப்பாடசாலைக்கு வருகைதந்து அக்கணமே மாத்தளை தீயணைக்கும் பிரிவினர் வரவழைக்கப்பட்டு தீ பரவாதிருக்க தீயணைக்க பகீரத பிரயத்தனம் மேற்கொள்ளப்பட்டது இருந்தும் இரவு 11.00 மணிவரையிலும் இத் தீ பரவிய நிலையில் காணப்பட்டது இக்கட்டிடத்திலிருந்த மாணவர் களுக்கான விஞ்ஞான பாட கணனிகள் உட்பட இரசாயன பொருட்கள் என்பன தீக்கிரை யானதாகவும் இக்கட்டிட மேல்மாடியுடன் அதன் கூரையும் முற்றாக தீயிக்கிரையானதால் சுமார் இரண்டு கோடிக்கதிகமாக நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இக்கட்டிடத்தின் மின்னொளியை வழங்கும் இணைப்புக்கம்பியில் ஏற்பட்ட மின்கசிவே இத்தீ ஏற்படக் காரணமெனவும் இதுகுறித்து மாத்தளை குற்றத் தடுப்பு பொலீஸ் அதிகாரிகள் மின்சாரசபை அதிகாரிகள் இது குறித்து மேலும் விசாரனைகளை நடாத்தி வருகின்றனர்.

# ஜாமிஆ நளீமிய்யா வளாகத்தை பார்வையிட்ட கென்ய டிஜிட்டல் வ ஹெல்த் ஏஜென்ஸியின் தலைவர்




**(பேருவளை பீ.எம் முக்தார்)**

கொழும்பில் நடைபெற்ற உலகளாவிய டிஜிட்டல் சுகாதார மாநாட்டில் பங்குபற்ற இலங்கைக்கு விஜயம் செய்த கென்யா நாட்டின் சுகாதார அமைச்சின் டிஜிட்டல் ஹெல்த் ஏஜென்ஸியின் தலைவர் சைலத் சிமாத்வோ (Silas Simatwo, Chairman of Digital Health Agency of Kenya) பேருவளைக்கு வருகை தந்தார்.

பேருவளை ஜாமியா நளீமிய்யா கலாபீடம் உட்பட வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பகுதிகளுக்கும் இவர் விஜயம் செய்தார்.

பேருவளை ஜாமியா நளீமிய்யா கலாபீடத்தை சுற்றிப் பார்வையிட்ட அவர், இலங்கை முஸ்லிம்களுக்காக உயர்கல்வி பெறுவதற்கு மர்ஹூம் நளீம் ஹாஜியாரினால் அமைக்கப் பட்டதை பாராட்டினார்.

இவருடன் சமூக சேவையாளர் இஸ்மத் ராஸிக் மற்றும் மின்னாத் அலி, இஸ்பஹான் ஷாபி ஆகியோரும் சென்றனர்.

ஜாமியா நளீமிய்யா கலாபீட வளாகத்தில் எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம்.

# பாடசாலைகளுக்கு மூன்றாம் தவணை விடுமுறை!

மூன்றாம் பாடசாலை தவணைக்கான முதல் கட்ட விடுமுறையை நவம்பர் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

கல்விப் பொதுத் தராதர (GCE) உயர்தர (A/L) பரீட்சை ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி மூன்றாம் தவணையின் 3ஆம் கட்டம் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்த கட்டம் ஜனவரி 17 ஆம் திகதி நிறைவடையும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# சிரேஷ்ட ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயிலுக்கு மாகாண “சாஹித்ய விருது”!

**(மட்டு. துஷாரா)**

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படவுள்ள 2024 ஆம் ஆண்டுடின் இலக்கிய விழாவுக்கு, சிரேஷ்ட ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயில் மாகாண சாஹித்ய விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயில், மருத்துவம் சார்ந்த ஆக்கங்களை துறைசார் வைத்திய நிபுணர்கள் ஊடாக பெற்றுக்கொண்டு, அவற்றை தேசிய பத்திரிகை வாயிலாக, பொதுமக்களுக்கு நோய் பற்றிய தெளிவையும், அதிலிருந்து எவ்வாறு பாதுகாப்பு பெற்றுக் கொள்ளலாம் என்ற விழிப்புணர்வுகளையும் கடந்த பல வருடங்களாக எழுதி வருகின்ற அதேவேளை, அவற்றை நூல் வடிவிலும் தொகுத்து வழங்கி வருகின்றவராக இருக்கின்றார்.

அவ்வாறு தொகுத்தெழுதிய நூல்களில் ஒன்றான “நலன் தரும் மருத்துவம்” என்ற நூல் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் தெரிவுசெய்யப்பட்டு அந்நூலுக்கான “சாஹித்ய விருது” கிடைக்கவுள்ளதும், கடந்த வருடம் மாகாணத்திலுள்ள எழுத்தாளர்களிடம் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கோரிய நூல்களில் இவரின் நூலான “நலன் தரும் மருத்துவம்” தெரிவு செய்யப்பட்டு குறித்த திணைக்களத்தினால் அச்சிடப்பட்டு கொடுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.




அவர் இதுபோன்ற பல மருத்துவ ஆக்கங்களையும், நூல்களையும் தொடராக எழுதிய வருகின்றவராகவும், அவரினால் தொகுத் தெழுதப்பட்ட “நோயும் தீர்வும்” என்ற முதலாவது நூல் கிழக்கு மாகாணத்தில் மட்டுமல்ல தேசிய ரீதியில் இவ்வாறு எழுதப்பட்ட முதலாவது நூலாக இருந்ததனால் எல்லா மக்களினாலும் பேசப்பட்டு பாராட்டினையும், வாழ்த்துகளையும் பெற்றமை விஷேட அம்சமாகும்.



# டொனால்ட் ட்ரம்ப் இரண்டாம் ஆட்சி

## சர்வதேசத்தில் ஏற்படுத்தும் பாதிப்புகள் என்ன?



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

அமெரிக்க தேர்தலில் வெற்றி டொனால்ட் ட்ரம்ப் இரண்டாம் முறையாக பதவியை ஏற்க இருக்கும் நிலையில் அவர் சந்திக்க இருக்கும் பல்வேறு பிரச்சினைகள் அந்த தேசத்தை தாண்டிய நிலையில் சர்வதேச அளவில் மிகப் பெரிய அளவில் ஆன பாதிப்பை நிச்சயமாக ஏற்படுத்தும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. குறிப்பாக அமெரிக்காவின் எதேச்சாதிகார திட்டங்கள் பல்வேறு நாடுகளில் அவர்கள் மூக்கை நுழைத்து குழப்பம் ஏற்படுத்தும் நிலை தற்போது எப்படி இருக்கும் என்பதே சர்வதேச அரசியலில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

இதற்கிடையில் வெள்ளை மாளிகையின் அதிபர் அறையான ஓவல் அலுவலகத்தில் சந்தித்து இருவரும்( பைடன் மற்றும் டொனால்ட் ட்ரம்ப்) அதிகார மாற்றம் மற்றும் பிற விஷயங்கள் குறித்து தனிப்பட்ட முறையில் விவாதித்தார்கள். அதாவது அமெரிக்கா குடியரசு வகுத்துள்ள நியதி அடிப்படையில் இரு தலைவர்களும் கலந்து கொண்டு சந்தித்து பேசுவது தொடரும் மரபு என்பதால் தான் இது போன்ற சந்திப்புகள் நடை பெற்றதாக அறிவிக்கப்பட்டது. அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டிரம்ப், பைடனிடம் “அரசியல் கடினமானது“ என்று கூறினார். ”பல சமயங்களில் உலகம் நல்ல முறையில் நடந்துகொள்வதில்லை, ஆனால் இன்று உலகம் நன்றாக இருக்கிறது,” என்றார். தாம் எதிர்பார்க்கும் சுமூகமான அதிகார மாற்றத்திற்கு அவர் பைடனுக்கு நன்றி தெரிவித்தார். மிகவும் சுமுகமான அதிகார மாற்றத்தை நான் எதிர்பார்க்கிறேன். எந்த அளவுக்குச் சுமுகமாக இருக்க முடியுமோ அது அந்த அளவுக்குச் சுமுகமாக இருக்கும்,” என்று டிரம்ப் கூறினார்.

தற்போதைய நிலையில் அதிபர் ஜோ பைடனின் அழைப்பின் பேரில், டொனால்ட் டிரம்ப் வெள்ளை மாளிகைக்குச் சென்றிருக்கும் இந்த வழக்கம் 2020 தேர்தலில் டிரம்ப் பைடனிடம் தோற்றபோது நடக்கவில்லை.

அச்சமயம், டிரம்ப் அந்தத் தேர்தலில் தோல்வியடைந்ததை ஏற்றுக்கொள்ளவில்லை. தேர்தல் மோசடி பற்றிய தவறான கூற்றுக்களை முன்வைத்தார். அதை அவர் இன்னும் கூறி வருகிறார்.

வெள்ளை மாளிகையின் பாரம்பரியத்தை உடைத்து, டொனால்ட் டிரம்ப் அதிகார மாற்றத்தைப் பற்றி விவாதிக்க பைடனை வெள்ளை மாளிகைக்கு அழைக்கவில்லை.

மாறாக, பைடனின் வெற்றி நாடாளுமன்றத்தில் சான்றளிக்கப்பட வேண்டிய நாளில், டிரம்ப் ஒரு பேரணியை நடத்தினார். நாடாளுமன்றக் கட்டிடமான கேப்பிடாலில் நடந்த கலவரத்துக்கு முன்னதாக, அவர் தனது ஆதரவாளர்களிடம் “ஓயாமல் போராடுங்கள்“ என்று கூறினார்.

பின்னர் அவர் 2021-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பைடனின் பதவியேற்பு விழாவுக்குச் செல்வதையும் தவிர்த்தார்.

இப்போது, நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, ஒருவரையொருவர் அடிக்கடி கடுமையாகச் சாடிக்கொள்ளும் இரண்டு அதிபர்களும் “அமைதியான அதிகாரப் மாற்றத்திற்கு“ உறுதிபூண்டிருப்பதாகக் கூறியுள்ளனர். வெள்ளை மாளிகையின் பாரம்பரியத்திற்குத் திரும்பும் விதமாகச் இந்த சந்திப்பினை நடத்தியுள்ளனர்.

புதிய அமெரிக்கா அரசு மற்றும் டொனால்ட் ட்ரம்ப் பல்வேறு வகையான பிரச்சினைகளை சந்தித்து தீர்வு காண வேண்டிய ஒன்றாக இருக்கிறது.

முதலில் அமெரிக்காவில் லட்சக்கணக்கான புலம்பெயர்ந்தோர் முறையான ஆவணங்களின்றி வசிக்கின்றனர். அவர்களை நாடு கடத்துவதாக அளிக்கப்பட்ட டிரம்பின் பிரசார வாக்குறுதி மிகையானதல்ல” என்று டிரம்ப் அரசாங்கத்தில் புதிதாக நியமிக்கப்பட்டவர்கள் சிலர் தெரிவிக்கின்றனர். இந்த பிரச்சினை அமெரிக்காவில் மிகப்பெரிய அளவில் ஆன பின்னடைவை ஏற்படுத்தும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. பல தசாப்தங்களாக வாழ்ந்து வருகின்ற மக்களை அதாவது மெக்சிகோ மற்றும் வட அமெரிக்கா நாடுகளில் இருந்து சட்ட விரோதமாக குடியேறிய மக்களை வெளியேற்றும் நடவடிக்கையில் பல்வேறு சட்ட சிக்கல் ஏற்படலாம் என்பதே யதார்த்தமான உண்மையாகும்.

முதல் பதவிக்காலத்தில் குடியேறிகள் மற்றும் சுங்க அமலாக்கத் துறையின் (ஐஅஅபைசயவழைெ யனெ ஊரளவழஅள நுகெழசஉநஅநவெ) செயல் இயக்குநராகப் பணியாற்றிய தாமஸ் ஹோமன், அமெரிக்க-மெக்சிகோ எல்லையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆவணமற்ற மக்களைக் கண்டறியும் அதிபரின் கொள்கையை ஆதரித்தார்.இப்போது அவர் டிரம்பின் “குடியேற்றத் திட்டங்களின் நிர்வாக அதிகாரியாக” இன்னும் பெரிய திட்டங்களைக் கொண்டுள்ளார். அதாவது ட்ரம்ப் நிர்வாகம் இதன் மூலம் பெரிய அளவில் ஆன மாற்றத்தை அமெரிக்காவில் கொண்டு வர முயற்சி செய்து வருவதை நாம் காண கூடியதாக இருக்கிறது. இது போன்ற சட்ட விரோதமாக குடியேறிய பலர் நாட்டில் இருந்து வெளியேற்றப்பட நடவடிக்கைகள் தூரிதப்படுத்தப்படும் என்று நம்பப்படுகிறது.இது அமெரிக்க துவரை கண்டிராத மிகப்பெரிய நாடு கடத்தல் படையைத் தான் இயக்கப் போவதாக” ஜுலை மாதம் நடைபெற்ற ஒரு மாநாட்டில் அமெரிக்கா அரசு அதிகாரி தெரிவித்துள்ளார்.

டொனால்ட் டிரம்பின் இந்த மிகப்பெரிய நாடு கடத்தல் திட்டத்திற்கு 300 பில்லியன் டாலர்கள் வரை செலவாகும் என்று விமர்சகர்கள் எச்சரித்துள்ளனர். அதாவது இந்திய மதிப்பில் 26 இலட்சம் கோடி ரூபாய் அளவுக்கு செலவுகள் வரும் என்பது தான் உண்மையாகும்.ஆனால், “செலவு” ஒரு பிரச்னை இல்லை என்று கடந்த வாரம் என்பிசி செய்திக்கு அளித்த பேட்டியில் டொனால்ட் டிரம்ப் கூறினார்.

இந்த துரிதப்படுத்தும் நடவடிக்கைகள் மூலம் நாடு பரிசுத்தமான நிலையை அடையும் என்று டோனல்ட் ட்ரம்ப் உறுதியாக நம்புகிறார். சட்ட விரோத குடியேறிகள், மக்களைக் கொலை செய்தார்கள், போதைக் கடத்தல்காரர்கள் நாடுகளை நாசமாக்கினார்கள். இப்போது அவர்கள் அந்தந்த நாடுகளுக்கே திரும்பச் செல்லப் போகின்றனர். அவர்கள் இனிமேலும் இங்கே தங்க முடியாது,” என்று தனது நாடு கடத்தல் திட்டம் குறித்து டோனல்ட் ட்ரம்ப் கூறினார்.

பொருளாதார ரீதியாகவும், ராணுவ ரீதியாகவும் உலகளாவிய அமெரிக்க மேலாதிக்கத்திற்கு சீனா மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருப்பதாகப் பலர் நம்புகின்றனர். அமெரிக்காவின் வளர்ச்சி மற்றும் ராணுவ மேலாதிக்க நிலையை கட்டுப்படுத்தும் சக்தியாக சீனா மாறி விடலாம் என்று அமெரிக்கா அச்சப்படும் நிலை காணப்படுகிறது.ஆகவே தான் வர்த்தகம் என்ற எல்லைக்குள் சீனா குறித்தான தனது விமர்சனங்களை டிரம்ப் கவனமாக வெளிப்படுத்துகிறார். தனது வெளியுறவுக் கொள்கைக் குழுவுக்கு ஆதரவாக சீன விமர்சகர்களைக் குரல் எழுப்ப வைக்கிறார். அதாவது சித்தாந்த ரீதியாக சீனாவுக்கு எதிரான முழக்கத்தை இனி வரும் காலங்களில் அவர் தொடருவார் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

தனது தேசிய பாதுகாப்புத் துறை ஆலோசகராக, டிரம்ப் ஃப்ளோரிடா நாடாளுமன்ற உறுப்பினரான மைக் வால்ட்ஸை தேர்வு செய்துள்ளார். அவர் ஓர் ஓய்வுபெற்ற ராணுவ கர்னல். இது வெள்ளை மாளிகையின் முக்கிய வெளியுறவுக் கொள்கைப் பதவி. இவரது நடவடிக்கை முழுமையாக மத்திய கிழக்கு நாடுகளில் ஹமாஸ், ஹிஸ்புல்லாஹ் மற்றும் ஈரான் ஆதிக்கத்தை அழித்து விட வேண்டும் என்பதில் அவர் உறுதியான கொள்கையை வகுப்பார் என்பது தான் இன்றைய நிலையாக இருக்கிறது.

அமெரிக்கா சீனாவுடன் ”பனிப்போரில்” இருப்பதாகத் தெரிவித்த அவர், 2022 பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக்கை புறக்கணிக்க அமெரிக்கா அழைப்பு விடுத்தபோது நாடாளுமன்ற கூட்டணியின் உறுப்பினர்களில் ஒருவராகவும் வால்ட்ஸ் இருந்தார்.

அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் எலிஸ் ஸ்டெஃபானிக், கடந்த அக்டோபர் மாதம், சீனா அமெரிக்க தேர்தலை முடக்கத் திட்டமிடுவதாகக் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார். அதாவது சீனா தான் தற்போதைய அமெரிக்கா குடியரசின் பரம வைரி என்பது போன்ற ஒரு கட்டமைப்பை டொனால்ட் ட்ரம்ப் அரசு கட்டமைக்க முடியும் என்று நம்புகிறது.இனி வரும் காலங்களில் அது தான் நடைபெறும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.சீன ஆதரவு ஹேக்கர்கள் டிரம்பின் செல்போனில் உள்ள தகவல்களைத் திருட முயல்வதாக செய்திகள் வெளியானதைத் தொடர்ந்து அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார். எனவே தான் எலிஸ் ஸ்டோஃபானிக் ட்ரம்ப் ஆல் ஐ.நா சபைக்கு அமெரிக்க தூதுவராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.டிரம்ப் தனது வெளியுறவுத் துறை செயலராக, ஃப்ளோரிடா செனட்டர் மார்கோ ரூபியோவை அறிவிக்கவுள்ளார். அவரும் சீனாவின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து விமர்சித்து வருபவராகவே உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2020இல் ரூபியோ சீன அரசுக்கு எதிராக ஹாங்காங்கில் போராடி வரும் போராட்டக்காரர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்தார். அதனால், சீன அரசு அவர்மீது பயணக் கட்டுப்பாடு மற்றும் வணிகரீதியாகச் சில கட்டுப்பாடுகளை விதித்தது. அதாவது அங்கு அவர் வருவதை சீனா முழுமையாக எதிர்த்து வந்தது. டிரம்பின் முதல் பதவிக் காலத்தில், வர்த்தக சச்சரவுகள், கோவிட் பேரிடர் என அமெரிக்கா - சீனா உறவு நிலையற்றதாக, பதற்றம் நிறைந்து இருந்தது. சீனா மீதான டிரம்பின் பல கடுமையான கொள்கைகளை பைடன் நிர்வாகம் தொடர்ந்த போதிலும், மேலும் சில புதிய வரிகளைச் சேர்த்தது, சிறிதளவு பதற்றத்தைக் குறைக்க உதவியது. ஆனால், முழுமையாகப் பதற்றம் குறையவில்லை. இந்நிலையில், டிரம்ப் மீண்டும் பதவிக்கு வந்து, சீனா மீதான அதே கடினமான நிலைப்பாட்டைத் தொடர்வார் எனத் தெரிகிறது. சீனாவில் இருந்து அமெரிக்க இறக்குமதி செய்யப்படாம் பொருட்களுக்கு 60 சதவீதம் வரிகளை அதிகரிக்கும் என்று தற்போது நம்பப்படுகிறது. அதேநேரத்தில் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பல்வேறு பொருட்களை தடை செய்ய அமெரிக்கா புதிய அரசு மறைமுக மற்றும் நேர்மறையான நடவடிக்கைகளை தொடரலாம் என்று நம்புவதற்கு அதிகம் இடம் இருப்பதை நாம் அவதானிக்க முடிகின்றது.

அதேநேரத்தில் டொனால்ட் டிரம்புக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் இடையிலுள்ள உறவின் வரலாறு கலவையான ஒன்று. ஒருபுறம், ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரித்ததன் மூலமும், ஆக்கிரமிக்கப்பட்ட கோலன் குன்றுகளை இஸ்ரேல் கைப்பற்றியதை அங்கீகரித்ததன் மூலமும், டிரம்ப் இஸ்ரேலை மகிழ்வித்தார், அரபு நாடுகளை வருத்தப்படுத்தினார். இது அவரது முதல் ஆண்டு ஆட்சியின் வரலாறு. மேலும் அவர் 2020-இல் ஆபிரகாம் உடன்படிக்கையை கொண்டுவந்தார். இது, ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன், மொராக்கோ ஆகிய நாடுகளுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே முழு ராஜதந்திர உறவுகளை நிறுவியது, சூடானை அதற்கு ஒப்புக்கொள்ள வைத்தது.

கடந்த 2018-ஆம் ஆண்டு, கூட்டு விரிவான செயல் திட்டம் (துழுைவெ ஊழஅிசநாநளெைநீ டயஎெ ழுக யுஉவழைெ - துஊீழுயு) என்று அழைக்கப்படும் இரான் அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்காவை வெளியேற்றினார். அதனை ‘வரலாற்றில் மிக மோசமான ஒப்பந்தம்’ என்று அழைத்தார் அவர்.அந்த ஒப்பந்தத்தின் நோக்கம், இரானின் அணுசக்தி முயற்சிகளைக் கட்டுப்படுத்துவது. ஆனால் அது இரானின் பாலிஸ்டிக் ஏவுகணைத் திட்டத்தைச் சமாளிக்கத் தவறி, இரானின் புரட்சிகரக் காவலர் படைக்கு நிதி கிடைக்க வழிசெய்தது என்ற கருத்தைக் கொண்டிருந்தார் டொனால்ட் டிரம்ப். இந்த நிதியை இரான் பல மறைமுகப் போராளிக் குழுக்களுக்கு வழங்கியது என்றும் அவர் கருதினார். அந்தப் பிராந்தியத்தின் பல அரசுகளும் இந்தக் கருத்தைக் கொண்டிருந்தன. தற்போதைய நிலையில் ஈரான்சிழஒல மூலம் தான் மத்திய கிழக்கு நாடுகளில் தான் நினைப்பதை மிகவும் எளிதாக சாதித்து வருகிறது.கடந்த 2020-ஆம் ஆண்டு, டிரம்ப் இரானின் புரட்சிகர காவலர் படையின் குட்ஸ் அணித் தலைவரான காசிம் சுலைமானியைக் கொலை செய்ய உத்தரவிட்டார். இது இரானுக்கு ஆத்திரமூட்டியது.

ஈரான் மற்றும் அமெரிக்க நாடுகளின் உறவுகள் இனி வரும் காலங்களில் பலப்பட வாய்ப்பே இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது. டிரம்ப் தன்னுடைய இரண்டாவது ஆட்சியில் நியமனம் செய்யப்பட இருப்பதாக தேசிய பாதுகாப்பு ஆலோசகர், வெளிவிவகாரத்துறை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு துறை செயலாளர் என்ற அனைவரும் மத்திய கிழக்கு நாடுகளில் ஹமாஸ்,ஹிஸ்புல்லாஹ், ஹொதி மற்றும் ஈரான் தலைவர்களை முழுமையாக அழித்து விட வேண்டும் என்கிற தீர்க்கமான கொள்கையை கடைபிடிக்கும் அதிகார வர்க்கம் என்பது தற்போது வெளியாகியுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் அதிகாரம் தன்னிச்சையாக செயல்படுவதை தடுக்கும் அணைத்து வகையான முட்டுக்கட்டை நடவடிக்கைகளில் ஈடுபட அமெரிக்கா மிகவும் துல்லியமான அளவில் ஆன சதித்திட்டம் வகுத்து அதற்கென சாமர்த்தியமாக காய்களை நகர்த்தி வருவதைக் காண கூடியதாக இருக்கிறது . இஸ்ரேல் ராணுவம் எப்போதும் அமெரிக்கா அரசின் உத்தரவுகளை புறக்கணிக்க கூடியதாக ஒரு போதும் இருக்க வாய்ப்பே இல்லை என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள முடிகிறது. அமெரிக்க ஒரு புறம் ஆயுதங்களை இஸ்ரேலிய ராணுவத்திற்கு சப்ளை செய்து வருவதையும் , மற்றொரு புறமாக சமாதானம் பேசுவது என்பது தொடருகிறது. கடந்த ஆட்சி காலத்தில் அமெரிக்கா அதிபராக இருந்த டொனால்ட் ட்ரம்ப் ஜெருசலேம் நகரைச் இஸ்ரேலிய நாட்டின் தலைநகராக மாற்றினார். அதேநேரத்தில் தற்போதைய நிலையில் அமெரிக்கா அதை விட மோசமான கொள்கை மற்றும் நடைமுறைகளை தான் தற்போதும் தொடர்ந்து வருவதைக் காண கூடியதாக இருக்கிறது.

# சிவப்பு அலையில் சிதறுண்ட கட்சிகள்

## முடிவுகள் சொல்லும் படிப்பினைகள்!



எம்.எஸ். அமீர் ஹுசைன்




பாராளுமன்றத்திற்கு 196 மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தல் 2024 நவம்பர் 14 ஆம் திகதி நடந்தது. 1931 ஆம் ஆண்டு சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டு 93 வருடங்கள் கழிந்த நிலையில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் இந்த தேர்தல் நடைபெற்றது. செப்டம்பர் மாதம் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் அதிகப்படியான வாக்குகளை பெற்று ஜனாதிபதியாக தெரிவாகி இருக்கின்ற அநுரகுமார திசாநாயக்காவின் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி (என்.பி.பி) இந்த தேர்தலில் 68, 63,183 வாக்குகளைப் பெற்று 159 ஆசனங்களுடன் பாரிய வெற்றியை ஈட்டி இருக்கின்றது. மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்திற்கும் அதிகமான வெற்றியாக இந்த தேர்தல் முடிவு அமைகின்றது.

மரபு ரீதியாக இந்த நாட்டின் அரசியலில் கொடி கட்டிப் பறந்த எந்தவொரு கட்சியும் அதன் பெயரில் இம்முறை பொதுத் தேர்தலில் தாக்குப்பிடிக்காத அளவிற்கு மக்கள் ஆதரவு அலை தேசிய மக்கள் சக்தியின் பக்கம் திரும்பி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருப்புமுனையை ஏற்படுத்தி இருக்கின்றது. தேர்தல் முடிவுகளை அவதானிக்கின்ற போது பல விடயங்களை காண முடிகின்றது. 2019 ஆம் ஆண்டு ராஜபக்ஷ குடும்பத்தை சேர்ந்த கோத்தாபய ராஜபக்ஷ இதே எண்ணிக்கைக்கு சற்று குறைவான வாக்குகளைப் பெற்று 145 ஆசனங்களை பெற்று வெற்றி பெற்றார். ஆனால் இந்த தேர்தலில் அதே கட்சி வெறும் இரண்டு ஆசனங்களையும் ஒரு தேசிய பட்டியல் ஆசனமுமாக 03 ஆசனங்களும் மிக மோசமான பின்னடைவை கண்டிருக்கின்றது. இனி ராஜபக்ஷ குடும்பமும் மொட்டு கட்சியும் அவசியம் இல்லை என்ற அளவுக்கு அக்கட்சிக்கு தோல்வி ஏற்பட்டிருக்கின்றது.

ரணில் விக்கிரமசிங்காவின் தலைமைத்துவத்திலான புதிய ஜனநாயக முன்னணி 02 தேசிய பட்டியல் ஆசனங்களுடன் 05 ஆசனங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டு படுதோல்வியை சந்தித்திருக்கின்றது. இந்த கட்சிக்குள் இருந்து போட்டியிட்டவர்கள் கடந்த இரண்டு வருடங்களாக மஹிந்த ராஜபக்ஷவை விட்டு வந்து ரணில் விக்கிரமசிங்காவின் தலைமைத்துவத்தில் ஆட்சியில் அனுபவித்தவர்களாவர். இந்த கட்சி சந்தித்த தோல்வியுடன் 60 இற்கும் மேற்பட்ட பிரபல அரசியல்வாதிகளின் கதை முடிந்துவிட்டது. அதே நேரம் 68 ஆசனங்களுடன் பிரதான எதிர்க்கட்சியாக இருந்த சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி என்ற சமகி ஜனபலவேகய கட்சி கடந்த ஜனாதிபதித் தேர்தலை விட மிக மோசமான பின்னடைவை சந்தித்திருக்கின்றது. அக்கட்சித் தேர்தல் மூலம் 35 ஆசனங்களையும் தேசிய பட்டியல் ஊடாக 05 ஆசனங்களுடன் 40 ஆசனங்களை பெற்று எதிர்க்கட்சியாகும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றது.

அவ்வாறே வடக்கில் தமிழரசுக் கட்சிக்கும் பலமான அடிவிழுந்து பாரிய பின்னடைவை சந்தித்து இருக்கின்றது. அதன் பிரபல அரசியல் வல்லுனராக இருந்து வரும் ஜனாதிபதி சட்டத்தரணி எம். சுமந்திரனை ஓரம் கட்டும் அளவிற்கு ஜே.வி.பி. யின் அலை வடக்கில் மிக வேகமாக அடித்தது என்றே கூறலாம்.

ஆனாலும் மட்டக்களப்புஇ திருகோணமலை மாவட்டங்களில் தமிழரசுக் கட்சி பெற்றுக்கொண்ட ஒரு சில ஆசனங்களுடன் தேசிய பட்டியல் மூலம் 01 ஆசனத்துடன் 07 ஆசனங்களை தக்க வைத்துக் கொண்டிருக்கின்றது. தமிழரசுக் கட்சிக்கு கிடைத்த இந்த தோல்வி மூலம் இதுவரைகாலம் அந்த கட்சி முன்னெடுத்து வந்த தமிழர் தயாக கோட்பாடுஇ சுய நிர்ணய உரிமை என்ற தத்துவங்களுக்கு வடக்கில் இனி இடமே இல்லை என்ற நிலையை என்.பி.பி. யின் வெற்றி வெளிப்படுத்தி இருக்கின்றது. ஸ்ரீ.ல.சு. கட்சியும் இந்த தேர்தலுடன் போன இடம் தெரியாமல் மறைந்து விட நிலை தான்.

அத்துடன் இதுவரை அரசியல் வானில் கொடி கட்டிப் பறந்த பல மூத்த அரசியல்வாதிகளையும் இந்த தேர்தல் முடிவு மூலம் வீட்டுக்கு அனுப்ப வழி வகுத்திருக்கின்றது. அதிலும் முஸ்லிம் சமூகத்தை பொறுத்தவரையில் ரவூப் ஹக்கீம் கண்டி மாவட்டத்திலும்இ ரிசாத் பதியுத்தீன் வன்னி மாவட்டத்திலும்இ கபீர் ஹாஷிம் கேகாலை மாவட்டத்திலும் தங்களது ஆசனங்களை தக்கவைத்து தொடர்ந்தும் முஸ்லிம் சமூகத்தின் குரலாக பாராளுமன்றம் செல்கின்றனர்.

என்.பி.பி. கட்சியைப் பொறுத்தவரையில் 03 பேரைத் தவிர ஏனைய அனைவரும் அரசியலுக்கு புதியவர்களாக பாராளுமன்றம் செல்கின்றனர். அக்கடசி தேர்தல் பிரசாரங்களில் குறிப்பிட்டது போன்று பழையவர்களை துரத்தி புதியவர்களை கொண்டு சிவப்பு நிறத்தால் பாராளுமன்றத்தை நிரப்ப வாக்களிக்க வேண்டும் என்று கேட்டது போன்று 159 உறுப்பினர்களுள் 154 பேர் புதியவர்களாக இருக்கின்றனர்.

1977 ஆம் ஆண்டு இரண்டாவது குடியரசு யாப்பின் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட விகிதாசார பிரதிநிதித்துவ முறையே தற்போது நடைமுறையில் இருந்து வருகின்றது. இந்த தேர்தல் முறை நடைமுறையில் இருந்து வருவதால் ஏதோ ஓரளவுக்காவது எதிர்க்கட்சி என்ற அந்தஸ்து பாதுகாக்கப்பட்டு 40 ஆசனங்கள் கிடைத்திருக்கின்றது. இன்றேல் தேசிய மக்கள் சக்திக்கு திகாமடுல்லை மாவட்டத்தில் வெற்றி பெற்ற ஒரு தொகுதிக்கான 01 ஆசனத்தை தவிர வேறு எந்த ஆசனங்களும் கிடைக்க வாய்ப்பு இல்லை. எதிர்க்கட்சியில் 20 இற்கும் குறைவான உறுப்பினர்களே இருந்திருப்பார்கள். ஏதோ ஜே.ஆர் ஜெயவர்தன செய்த புண்ணியம் காரணமாக பாரிய சுனாமி போன்று மட்டக்களப்பு மாவட்டம் தவிர ஏனைய 21 மாவட்டங்களையும் சூழற்றி எடுத்து அமோக வெற்றியை தேசிய மக்கள் சக்தி பெற்றிருக்கின்றது.

இந்த தேர்தல் முடிவுகளின்படி பிரதான கட்சிகளாக இலங்கை அரசியலில் கொடிகட்டிப் பறந்த பொதுஜன பெரமுணஇ சமகி ஜனபலவேகயஇ ஸ்ரீ.ல.சு.கட்சி உட்பட பல கட்சிகள் துடைத்தெறியப்பட்டுள்ளன. அந்தளவிற்கு எதிர்பாராத அளவில் மக்கள் ஆதரவு ஓரணியில் திரண்டு அநுரகுமார திசாநாயக்காவின் பலம் உறுதிப்படுத்தப் பட்டிருக்கின்றது. ஒட்டுமொத் தமாக ராஜபக்ஷ யுகம் இ ரனில் யுகம்இ மைத்திரி யுகம் என்று எல்லா யுகங்களும் மறைந்து அரசியல் வரலாற்றில் புதிய அத்தியாயம் மலர்கின்றது.

அதே நேரம் ஏற்கனவே பூண்டோடு ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ் கட்சியை பூண்டோடு அழிக்க வேண்டும் என்று அம்பாறை மற்றும் கிழக்கு மாகணத்தில் நடத்தப்பட்ட போராட்டம் வெற்றிபெறவில்லை. ரவுப் ஹக்கீம்இ ரிசாத் பதியுத்தீன்இ கபீர் ஹாஷிம் போன்றவர்கள் அவர்களது ஆசனங்களில் தோல்வி கண்டாலும் தமது பாராளுமன்ற ஆசனத்தை பாதுகாத்துக்கொள்ள மக்கள் கைகொடுத்துள்ளனர். இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து நீண்ட இடைவெளிக்கு பிறகு மீண்டும் எம். எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் பாராளுமன்றம் வரும் வாய்ப்பை பெறுகின்றார்.

இவ்வாறான பாரிய அரசியல் சூராவளி ஒன்று வீசி பாராளுமன்றத்தில் 40 வருடங்களுக்கு மேல் ஏகாதிபத்தியம் செலுத்தி வந்த பல மூத்த அரசியல்வாதிகளை வீட்டுக்கு அனுப்பி அவர்களது அரசியல் பக்கங்களை முற்றாக முடித்துவிடும் அளவிற்கு வழிவகுத்த காரணிகள் யாவை? மக்கள் மனங்களில் தாக்கம் செலுத்திய வெறுப்புணர்வு எத்தகையது என்பன தொடர்பாக ஒரு மீளாய்வு அவசியமாகின்றது.

நடைமுறையில் இருந்து வருகின்ற இந்த தேர்தல் முறை காரணமாக ஆட்சியை பிடிக்க பெரும்பான்மை பலத்தை பெற முடியாமல் போகும் கட்சிக்கும் கூட ஆசனங்கள் கிடைக்கப்பெற்று எதிர்க்கட்சியாகும் வாய்ப்பு கிடைப்பது இந்த தேர்தல் முறையின் சிறப்பம்சமாகும். அரசாங்கத்தை அமைப்பதற்கு ஒரு கட்சிக்கு 113 ஆசன பலம் தேவைப்படுகின்றது. இலங்கையின் அரசியல் வரலாற்றை தலைகீழாக புரட்டியுள்ள தேசிய மக்கள் சக்தியின் உண்மையான வடிவம் சோசலிச சமூக உடைமைவாத கட்சியான முன்னைய மணி சின்னத்திலான மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) ஆகும். இந்த கட்சி உருவான நாளில் இருந்து பல போராட்டங்களையும் புரட்சிகளையும் நடாத்தி தோல்வி கண்டிருந்த நிலையில் மீள் எழுச்சி பெற்று 2010 ஆம் ஆண்டில் இருந்து பாராளுமனற்த்தில் 03 ஆசனங்களுடன் இருந்து படிப்படியாக வளர்ச்சி கண்டு இம்முறை ஒட்டு மொத்த ஆட்சியை பிடிக்கின்ற அளவிற்கு வளர்ச்சி கண்டிருக்கின்றது.

இந்தளவிற்கு வளர்ச்சி காண காரண கர்த்தாவாக இருந்தவர் அநுரகுமார திசாநாயக்கா ஆவார். அவரது வழிநடாத்தல்இ தலைமைத்துவம் இலங்கை முழுவதிலும் கட்சி பிரபல்யம் அடைய காரணமாக அமைந்தது. அதே நேரம் 2005 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையும் அதன் பின்னர் 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையும் இந்த நாட்டை ஆட்சி மஹிந்த ராஜபக்ஷ குடும்பம் இந்த நாட்டில் அரச வளங்களை களவாடி சூரையாடியதாக மக்கள் மத்தியில் பாரிய அதிருப்தியும் கவலையும் ஏற்பட்டிருந்தது. அரச சொத்துக்களை சூறையாடி வெளிநாட்டு வங்கிகளில் சேமித்து வைத்திருப்பதாகவும் பாரியளவு முதலீடுகளை செய்து மஹிந்த ராஜபக்ஷ வின் குடும்பம் உல்லாசமாக வாழ்வதாகவும் கதைகள் பரப்பப்பட்டதால் மக்கள் மத்தியில் இந்நாட்டின் அரசாட்சி குறித்து வெறுப்பும் அதிருப்தியும் ஒருவிதமான விரக்தி நிலையும் உருவாக ஆரம்பித்தது.

இந்த மிக மோசமான கதைகளுக்கு போதுமான ஆதாரமாக 2019 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதியின் சகோதரரான கோத்தாபய ராஜபக்ஷ ஜனாதிபதி யாகியவுடன் அந்த ஆட்சியில் அவரது மற்றுமொரு சகோதரரான பஷில் ராஜபக்ஷ நிதி அமைச்சராகவும் இருந்தார். இந்த காலப்பகுதியில் வரலாற்றில் ஒருபோதும் இல்லாத அளவிற்கு நாடு மிக மோசமான பொருளாதார சரிவையும் வீழ்ச்சியையும் காணும் நிலை ஏற்பட்டது. பண வீக்கம் 70 சத வீதம் வரை உயர்வடைந்தது. இலங்கை மத்திய வங்கியின் கையிருப்பில் இருக்க வேண்டிய ஐக்கிய அமெரிக்க டாலரிலான சிறப்பெடுப்பொதுக்கு முற்றாக வீழ்ச்சி கண்டு நாட்டிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத அளவிற்கு நாடு பொருளாதார சரிவை சந்தித்தது. அதனால் நாட்டில் பாரிய எரிபொருள் தட்டுப்பாடுஇ அத்தியவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடுஇ மருந்து வகைகளுக்கான தட்டுப்பாடு என்று நாடு நெருக்கடிகளை சந்திக்கலாயிற்று.

உள்நாட்டில் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் மிக மோசமாக அதிகரித்தது. 2015 ஆம் ஆண்டு 330 ரூபாவுக்கு இருந்த 400 கிராம் பால் மா பெக்கட் ஒன்றின் விலை 1150 வரையும் அதிகரித்தது. 76 ரூபாவுக்கு இருந்த அரிசி ஒரு கிலோ 350 ரூபா வரையில் அதிகரித்தது. 115 ரூபாவுக்கு இருந்த பெற்றோல் ஒரு லீட்டர் 430 வரையில் அதிகரித்தது. பிரதிபலனாக நாட்டில் அனைத்து வகையான பொருட்களின் விலைகளும் 300 சத வீதத்தால் உயர்வடைந்தது. இதற்கிடையில் மஹிந்த ஆட்சியில் இருந்த அமைச்சர்கள், அதிகாரிகள் பலர் ஊழல்களில் ஈடுபட்டு பெருத்த சொத்து ஈட்டியவர்களாக கொடி கட்டிப் பறந்தனர். இதற்கு சிறந்த உதாரணமாக அப்போதைய சுகாதார அமைச்சராக இருந்த கெஹெலிய ரம்புக்வெல்ல தரம் குறைந்த தடுப்பூசி வகைகளை குறைந்த விலைக்கு இறக்குமதி செய்து கூடுதலான விலைகளுக்கு விற்பனை செய்து பெருத்த மோசடியில் ஈடபட்டமை சட்டத்தின் மூலம் உறுதியாகி இருக்கின்றது.

எவ்வாறாயினும் புதிய அரசியல் எதிர்பார்ப்புக்களுடன் மலரும் அநுரகுமார யுகமான என்.பி.பி. ஆட்சியில் மக்கள் எதனை எதிர்பார்க்கின்றார்கள் என்பதும் முக்கியமான விடயமாகின்றது. இந்த என். பி.பி. பதவிக்கு வருவதற்காக வழங்கிய ஒரே வாக்குறுதி நாட்டில் திருடர்களை பிடிப்போம்இ ஊழலை ஒழிப்போம்இ நல்லாட்சியை ஏற்படுத்துவோம் என்பனவாகும். அநுரகுமார திசாநாயக்காக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் பேசும் போது ஏனைய கட்சிக்காரர்களுக்கு அழுகை வருகின்ற அளவிற்கு வெற்றிபெற வேண்டும் என்றார். அத்துடன் பாராளுன்றத்தை சுத்தப்படுத்தி துப்புறவு செய்து சிவப்பால் நிரப்ப வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். இந்த விடயங்களால் மக்கள் கவரப்பட்டனர். வாக்களித்தனர். பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பெறுகின்ற அளவிற்கு வெற்றியை நிச்சயித்தனர்.

எவ்வாறாயினும் கார்ல் மார்க்சின் கோட்பாட்டின் படி உருவாக்கம், அழிவு, மீண்டும் உருவாக்கம் என்பது போன்று இந்த அரசாட்சியை மக்கள் உருவாக்கி உள்ளனர். ஆனால் காலப்போக்கில் இந்த ஆட்சியையும் அழித்துவிட்டு இன்னும் ஒன்றை உருவாக்குகின்ற அளவிற்கு மிக விரைவில் செல்லாமல் இருந்தால் நல்லது. இந்த ஆட்சி ஐந்து வருடங்களுக்கு நீடிக்க வேண்டும். அதற்கிடையில் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும். இந்த ஆட்சியிலும் ஊழல்கள்இ மோசடிகள்இ அரச சொத்து விரயம்இ பொருளாதார சரிவுஇ கஷ்டங்கள் என்பன ஏற்படாமல் பாதுகாத்து நாட்டை மீள் எழுச்சியடையச் செய்ய வேண்டும். மக்கள் எதிர்நோக்குகின்ற வாழ்க்கைச் செலவு பிரச்சினைஇ மெய்வருமானத்திலான வீழ்ச்சிஇ மொத்த தேசிய வருமானத்திலான வீழ்ச்சி என்பவற்றை கவனத்தில் எடுத்து முறையான பொருளாதார திட்டமிடல்இ முகாமைத்துவம் மூலம் நாட்டை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காவுக்கும் அவரது அமைச்சரவைக்கும் இருக்கின்றது.

அதே நேரம் இந்த தேர்தலில் தோல்வியை சந்தித்துள்ள அரசியல் கட்சிகளுக்குள் குழப்ப நிலைமைகள்இ பிளவுகள் ஏற்பட்டு மீண்டும் சின்னா பின்னப்படும் வாய்ப்புகளும் அதிகம் உள்ளன. அத்தகைய சந்தர்ப்பங்கள் இந்த ஆட்சிக்கு மேலும் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தலாம். அத்துடன் இந்த ஆட்சி தனிப்பெரும் கட்சியொன்றின் ஆட்சியாகும். கூட்டுக் கட்சிகள் இல்லை.

1970 ஆம் ஆண்டில் இருந்து 2019 ஆம் ஆண்டு வரையும் இலங்கை அரசியல் கூட்டணி ஆட்சி என்று இருந்த நிலைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டு தனி ஒரு கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்திற்கும் அதிகமான பலத்துடன் ஆட்சியை பிடிக்க 54 வருடங்கள் ஆகின.

அதனால் அரசியல்இ பதவி பேரப் பேச்சுக்களுக்கு இடமில்லை. நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி ஜனாதிபதி எத்தகைய முடிவுகளையும் எடுக்கலாம். இழுபறி நிலை இல்லை. அந்த வகையில் 1970 ஆம் ஆண்டில் இருந்து 2024 ஆம் ஆண்டு வரையில் இருந்த கூட்டணி ஆட்சி முறைக்கு முற்றுப்புள்ளி வைத்து தனிப் பலம் பொருந்திய தனிக் கட்சி ஆட்சிக்கு வழிவகுத்துள்ளமை அநுரகுமார திசாநாயக் காவின் சாதனை என்றே கூறலாம்.

ஆனாலும் அமைச்சரவையின் எண்ணிக்கை 25 ஆகவும், பிரதி அமைச்சர்களது எண்ணிக்கை 25 ஆகவும் வரையறுக்கின்ற போது புதியவர்களாக பாராளுமன்றத்திற்கு தெரிவாகி இருக்கின்ற டாக்டர்கள்இ சட்டத்தரணிகள்இ அதிபர்இ ஆசிரியர்கள் என்று பலதரப்பட்டவர்களும் தமக்கு ஒரு அமைச்சரவை அல்லது பிரதி அமைச்சர் பதவி வேண்டும் என்று எதிர்பார்த்தவர்களாக பாராளுமன்றம் வந்திருந்தால் காலப்போக்கில் இந்த ஆட்சி குறித்து அதிருப்தியும் வெறுப்பும் ஏற்படும் நிலைமைகளும் உள்ளன. அத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்கள் எடுக்கும் முடிவுகள் இந்த ஆட்சிக்கு பாதகமான நெருக்கடிகளையும் ஏற்படுத்தலாம் என்பதில் சந்தேகம் இல்லை.

# இந்த அரசு முஸ்லிம் மக்களின் உணர்வுகளை புரியாது செயற்படுவது கவலையைத் தருகின்றது

## இம்ரான் எம்.பி தெரிவிப்பு!



(எஸ்.ஏ. பறூஸ்)

இந்த அரசாங்கம் முஸ்லிம் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாது செயற்படுவது மிகவும் கவலையைத் தருகின்றது என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக வெற்றி பெற்றுள்ள இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ள அவர் மேலும் கூறியதாவது,

முஸ்லிம் மக்களும் இந்நாட்டின் பிரசைகள். அந்த வகையில் இந்த சமூகமும் ஏனைய சமூகங்களைப் போன்று கௌரவத்துடன் இந்நாட்டில் வாழ விரும்புகின்றது. இந்நாட்டின் சுதந்திர காலம் தொட்டு நியமிக்கப்பட்டு வந்த அமைச்சரவையில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவம் இருந்து வந்துள்ளது.

இலங்கை அரசியல் வரலாற்றில் முதற்தடவையாக இந்த அரசாங்கம் நியமித்த அமைச்சரவையில் முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதித்துவம் இல்லாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இதனால் நாடு முழுவதும் உள்ள முஸ்லிம் சமூகம் மிகுந்த கவலை கொண்டுள்ளது. சமூக வலைத்தளங்களை அவதானிக்கின்ற போது இதனைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

இந்த அரசாங்கத்தின் கடந்த குறுகிய கால செயற்பாடுகள் சிலவற்றை பாரக்கும் போது முஸ்லிம்கள் தொடர்பான வித்தியாசமான எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு இருக்கின்றதோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற கிழக்கு மாகாணத்தில் அந்த மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்ட 6 தவிசாளர் பதவிகளில் எந்தவொரு முஸ்லிம் தவிசாளரும் நியமிக்கப்படவில்லை. இந்த விடயம் பேசு பொருளான பின்னர் ஒரு முஸ்லிம் தவிசாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேபோல இந்த அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெற்ற 18 தேசியப்பட்டியல் ஆசனங்கள் தொடர்பான பெயர்ப் பட்டியல் முன்னர் வெளியிடப்பட்ட போது எந்தவொரு முஸ்லிம் உறுப்பினரதும் பெயர் வெளிவரவில்லை.

பின்னர் இதுவும் பேசுபொருளான பின்னர் ஒரு முஸ்லிம் உறுப்பினரது பெயரோடு புதிய பட்டியல் வெளியானது.

அந்த வரிசையிலேயே இப்போது இந்த அரசாங்கம் நியமித்துள்ள அமைச்சரவையில் இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக முஸ்லிம் பிரதிநிதித்துவம் இல்லாது செய்யப்பட்டுள்ளது. முஸ்லிம்களுக்கு எதிரான இனத்துவேசத்தை விதைத்து ஆட்சிக்கு வந்த கோத்தாபய ராஜபக்ஸ அரசாங்கத்தின் அமைச்சரவையில் கூட முஸ்லிம் பிரதிநிதித்துவம் இருந்தது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

இந்த உதாரணங்களை வைத்து நோக்கும் போது இந்த அரசாங்கத்திற்கு முஸ்லிம்கள் தொடர்பான வித்தியாசமான எண்ணம் இருப்பது போலவே எனக்குத் தோன்றுகின்றது.

இப்படியிருந்தால் இந்த ஆரம்பத்திலேயே இது கலையப்பட வேண்டும். இந்த அரசாங்கத்தோடு இணைந்திருக்கின்ற முஸ்லிம்கள் இந்தப் பணியைச் செய்ய வேண்டும்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் நாடளாவிய ரீதியில் அளிக்கப்பட்டுள்ள சுமார் 15 இலட்சம் முஸ்லிம் வாக்குகளுள் சுமார் 10 இலட்சம் முஸ்லிம் வாக்குகள் திசைகாட்டிக்கு அளிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் அளிக்கப்பட்டுள்ள வாக்கு விபரங்களை நுணுகி ஆராய்கின்ற போது இந்த உண்மையை விளங்கிக் கொள்ளலாம்.

முஸ்லிம்களின் இந்தளவு பெரிய எண்ணிக்கை வாக்குகளைக் கொடுத்து உருவாக்கப்பட்ட இந்த அரசாங்கம் முஸ்லிம் மக்களின் உணர்வுகளையும் புரிந்து செயற்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். - இவ்வாறு அவர் தெவித்தார்.




# பூரண மனித ஆளுமையாக்கும் வாசிப்பு

வாசிப்பு வெளிப்படையில் அறிவை மொழியை சிந்தனையை விரிவடையச் செய்வதாக இருந்தாலும் கூட அதனூடாக எதிர்பார்க்கப்படக்கூடிய முக்கியமான ஒன்றுதான் வாசிப்பவனின் சமூக ஆளுமையை வடிவமைப்பது அமைகிறது.

சமூகத்திலே அங்கீகாரம் பெறாத வாசகன் சமூக மாற்றத்திற்கு பங்களிக்காத வாசகன் தன்னளவில் எந்தவிதமான உருப்படியையும் கொண்டு வராத வாசகன் பற்றிய பார்வைகள் பயனற்றதாக இருக்கும்.

தன்னை அறிய உணர முதலில் வாசிக்க வேண்டும் அடுத்து தனக்கு அப்பால் இருக்கின்றவர்களை நெறிப்படுத்த வாசிப்பு வழிகாட்ட வேண்டும்.

சமூக செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு வாசிப்பு மிகப்பெரிய ஆயுதமாக இருக்கும். அறிவுரைகள் கூறவும், அறவுரைகள் கூறவும் அது வழியமைக்கும்.

ஆனால், வாசிப்பு ஒரு மனிதனை அறிவியல் அயோக்கியத்தனத்துக்கு intellectual arrogance இட்டுச் செல்வதாக இருப்பின் அல்லது பிறரை மட்டம் தட்ட சாட வெட்ட விமர்சிக்க வீண் விவாதத்திற்கு அழைக்க வம்புக்கு இழுக்க விமர்சிக்க வழிமைக்குமாயின் அந்த வாசிப்பு வாசகனுக்கு பண்பட்ட பக்குவப்பட்ட தன்மையை தரவில்லை என்பதுதான் அர்த்தம்.

வாசகன் பேரிடர்ச்சல் தரும் பெரும் கடல் அலை போல இன்றி அமைதியான ஆழ்கடல் போல அல்லது நூலகம் போல இருக்க வேண்டும்.

தொடராக வாசிக்கின்ற ஒருவன் தான் எவ்வளவு அறியாமை இருளில் மூழ்கி இருக்கின்றேன்? இன்னும் அறிந்து கொள்வதற்கு என்ன என்னவெல்லாம் தன் முன்னே கொட்டிக் கிடக்கின்றது? இவை அனைத்தையும் வாசிப்பதற்கு தன் ஆயுள்... வாழ்நாள் இடம் தருமா? என்ற ஏக்கத்தோடு வாழ்வான்.

இப்படி இருக்கையில் அறவே வாசிக்காதவர்களை பார்த்து அல்லது அடுத்தவர்களை பார்த்து கேவலமாக பேசுவதை விட்டும் தவிர்ந்து கொள்வான்.

இதனை விடுத்து ஒரிரண்டு புத்தகங்களை மாத்திரம் நுனிப்புல் மேய்ந்தால் போல வாசித்துவிட்டு அடுத்தவர்களை அறிஞர்களை வெட்ட விமர்சிக்க முற்படுவது எல்லாம் அறிவார்ந்தவர்களது பண்பாக அமையாது.

ஆக வாசிப்பு ஒருவனை சிந்தனை சார்ந்து செதுக்கி வடிவமைத்து விடுவதோடு மாத்திரம் நின்று விடாமல் அவனில் பணிவை உருவாக்கி விட வேண்டும். பண்பாட்டையும் கூடவே உருவாக்கி விட வேண்டும்.

எல்லா நூல்களையும் தன்னகத்தே கொண்டிருக்கின்ற ஒரு நூலகம் எப்பொழுதும் ஆர்ப்பாட்டமின்றி அமைதியாக தான் இருக்கும். ஆனால் அதனிடத்திலே எண்ணற்ற நூல்களும் கருத்துக்களும் சிந்தனைகளும் அடங்கி இருக்கும். அது குறித்து ஒருபோதும் நூலகம் பெருமிதம் கொள்ளாது பேரின்பம் அடையாது.

அதுபோல வாசகன் எப்பொழுதும் நிறைகுடமாக இருந்து தன்னை நிறைகுடம் ஆக்கிக் கொள்வதற்காக வாசிக்க கடமைப்பட்டிருக்கின்றான். அவனது வாசிப்பு அவனை எப்பொழுதும் பண்பட்டவனாக மாற்றிக் கொண்டே இருக்க வேண்டும். அந்த வாசிப்பு அவனை பக்குவத்தை நோக்கி முதிர்ச்சியை நோக்கி நகர்த்த வேண்டும்.

அதுவே பரிபூரண வாசிப்பின் பரிபூரண விளைவாக அமையும்.

# இலங்கை முஸ்லிம்களின் ஆயிரம் ஆண்டுக்கால வரலாறு(900-1915) கலாநிதி லோனா தேவராஜ்?






நாச்சியாதீவு பர்வீன்

(உக்குவனை அக்ரம்)

**அடுத்த வாரம் தொடரும்...**


பன்மைத்துவ சமூகத்தில் ஆயிரம் ஆண்டுகாலம் நம் மூதாதையர் வாழ்ந்து வந்துள்ளமை அரிய சாதனையாகும். நெகிழ்வுபோக்கும் சகிப்பு தன்மைமிகு பெரும்பான்மை சமூகம் நம் முதுசம்கள் மீது வைத்திருந்த நம்பிக்கை இதற்கு வழிகோலியது என்றால் மிகையல்ல. நிலமற்ற சமூகத்திற்கு, காற்றை போன்று ஓரிடத்தில் தரித்து நிற்காது நிலத்திற்கு நிலம் தாவி திரிந்த சமூகத்திற்கு விவசாயத்திற்காக அரச நிலமும்,வணக்க வழிபாட்டிற்கும் அதன் செலவீனத்திற்கும் விகாரை நிலங்களை வழங்கி பௌத்த பிக்குககள் மானிட நேயமும் சகோதரத்துவம் பேணிய நிலமதில்.. இன்று அவைகள் அருகி போனதால் தானோ! சண்டையும் சச்சரவும் பிணக்குககளும் என்று எண்ணத்தோன்றுகிறது?

இலங்கை மண்ணை ஆக்கிரமித்த ஒல்லாந்தர், போர்த்துக்கேயர், ஆங்கிலேயர் இங்கு வாழ்ந்த முஸ்லிம் சமூகத்தை பகைமை கொண்டு தரிசித்ததை வரலாறு புடம்போடுகிறது.

இவ்வாறான பார்வை கொண்ட வர்களின் வரலாற்று ஆசிரியர்களின் வரலாற்று குறிப்பு களிலிருந்தே நமக்கான இருப்பின் புள்ளிகளை ஒன்று சேர்க்க வேண்டிய கடப்பாட்டின் புள்ளிகளை இந்நுலாசிரியர் கவனமாக அவதானமாக பொறுக்கி எடுத்தாளுகிறார்.

கடலோடிகளாக, வைத்தியத் துறையில் தேர்ச்சி மிக்கவர்களாக,உலக வர்த்தக பொறிமுறையிலும் உள்நாட்டு வியாபாரத்திலும்,தமக்கென வியாபார போக்குவரத்து தவளம் முறையினை தன்னகத்தே கொண்டவர்களாக இருந தமை,ஒல்லாந்தர்,போர்த்துக்கேயர ,ஆங்கிலேயர்களிடையே தவிர்க்க முடியாத ஓரினமாக இத்தீவில் பரிமாணம் கொண்டனர்.

அலெக்ஸாண்டர் ஜோன்ஸ்டன் " கடற்கரைக்கு அப்பால் உள்ள உற்பத்திகளை அனுப்ப ஒவ்வொரு துறைமுகத்திலும் அவர்களின் முகவர்கள் இருந்தனர்.இவ்வாறு அவர்கள் கிழக்கு மாகாணத்திலிருந்து அரிசி மற்றும் கருநீலச்சாயம் சேகரிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து சாய வேர்,மச்சுகளுக்கு பயன்படுத்தப்படும் கறுப்புப் பனை மரம்.கோயில் திருவிழாவிற்கு பயன்படுத்தப்படும் சிப்பித்துண்டுகள். குதிரை மலையிலிருந்து முத்துக்கள்,புத்தளத்திலிருந்து




பாக்கு மற்றும் வெற்றிலை,தளப்பாடங்களுக்கான கருங்காலி,முதிரை,ஒரு ஆழமான இளச்சிவப்பு சாயம் தயாரிக்கும் ஒரு வகை மரம், கொழும்பிலிருந்துதேங்காய் எண்ணெய் மற்றும் கயிறு, காலியிலிருந்து தந்தம், யானைகள் என்பவற்றை சேகரித்தனர்.தீவின் அனைத்து மதிப்பு மிக்க பொருட்களும் முஸ்லிம் வியாபாரிகளால் மன்னார் மற்றும் மாந்தொட்டயில் நிறுவப்பட்டிருந்த பாரிய களஞ்சிய சாலைகளில் சேமிக்கப்பட்டிருந்தன. அவர்கள் மன்னார் தீவு அருகே தங்கள் சொந்த செலவில் பராமரித்து ,ஆயுதக் கப்பல்கள் மூலம் வர்த்தக பாதைகளையும் அவர்களின் வர்த்தக நலன்களையும் இந்தியப் பெருங்கடலில் மலிந்து இருந்த கடற் கொள்ளையர்களிடமிருந்து பாதுகாத்தனர்." என குறிப்பிடுகிறார். வர்த்தகத்தில் இவ்வாறு தீவகமெங்கும் வியாப்பித்து செல்வாக்குமிக்கவர்களாக தம் இருப்பை தக்க வைத்து கொண்டனர். இந்த மரியாதையும் மதிப்பும் "முஸ்லிம் வியாபாரிகள் தங்களது சொந்த சட்டங்கள் மூலமே தாம் விசாரிக்கப்படவேண்டும் என்ற ஒரு மிக முக்கியமான சலுகையை சிங்கள ஆட்சியாளர்களிடம் இருந்து பெற்றிருந்தனர். உள்நாட்டு ஆட்சியாளரின் நலன்கள் முஸ்லிம்களின் நலன்களோடு நெருக்கமானதாக இருந்தால் அவர்களுடைய அறிவுரைகள் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. என்பதை அவர்களின் தேவை ஆட்சியாளருக்கும் சிங்கள மக்களுக்கும் எவ்வாறு நெருக்கமாக இருந்ததை அவதானிக்க முடிகிறது.

பாரம்பரிய வியாபார நுணுக்கம்,சர்வதேச தொடர்புகள்,கடல் யாத்திரை அனுபவம் மற்றும் அது தொடர்புடைய அனைத்து தொழில் நுட்ப திறன்களை கொண்ட முஸ்லிம்கள் ஒரு விவசாய சமூகத்தின் தேவைகளை பூர்த்தி செய்வதில் வல்லவர்களாக இருந்தனர். முஸ்லிம்கள் தாம் வாழ்ந்த பகுதிகளை வளப்படுத்தினர். இதனால் அரச திறைசேரி நிறைந்தது. எனவே அவர்கள் இங்கு தங்கியிருக்க அனுமதிக்க வேண்டும் என காலி, அளுத்கமை,நீர்கொழும்பு சிங்களக் குடியிருப்பாளர்கள் போர்த்துக்கேயரிடம் ஒரு மனுவைத் தாக்கல் செய்தனர். போன்ற குறிப்புகள் முஸ்லிம் சமூகத்தின் நம் மூதாதையரின் மேன்மைகளை பறைசாற்றுவதாக அமைகிறது.

முஸ்லிம்களின் வரலாற்று புள்ளிகளை இணைக்க தூண்டியவர் பொன்னம்பலம் இராமநாதன் "இந்தியாவிலிருந்து வந்து மதம் மாறிய தமிழரே "என்ற வாதத்தை முன்மொழிந்தார். இந்த நச்சு கருத்தூட்டமே யு.ஆ.யு.அஸீஸ் அவர்களை " இலங்கை வந்த முதல் முஸ்லிம் குழுவினர் ஏழாம் நூற்றாண்டில் அரேபியாவிலிருந்து வந்த ஹாஷி மிக்களே" என்ற கூற்றை மொழிந்து அதனை வலுப்படுத்தினார்.

ஈ.பி.டென்ஹாம் இலங்கை குடிசன மதிப்பு அறிக்கையில் "தமிழர்களையும் சோனகர்களையும் நன்றாக அறிந்தவர்கள் பல வழிகளில் தமிழர்களை சற்றே ஒத்திருக்கின்ற சோனகர்களின் பல தனித்துவமான பண்புகள் பற்றி அறிந்திருப்பர். அவர்கள் மிக நெருக்கமாக இரண்டறக் கலந்தவர்களாகக் காணப்பட்டாலும் அவர்களது இனத்தின் மீது படிந்திருந்த அசல் அரபு இரத்த அடையாளம் மற்றும் அவர்களது முஹம்மதிய மதம் என்பன அவர்களில் சில வேறுபாடுகளை வலியுறுத்தி நின்றன.உடல் ரீதியாகக் கூட அவர்கள் கணிசமான தோற்ற வேறுப்பாட்டைக் கொண்டிருந்ததோடு

தமிழர் சனத்தொகையிலிருந்து அவர்களை வேறுப்படுத்திக்காட்டும் சில குறிப்பிட்ட குணவியல்புகள் ஒரு கவனமான மானுடவியல் பரிசோதனைக்கு உட்படுத்தி அறியக்கூடியவையாகும்."என்று அடையாளமிடுகிறார்.

இஸ்லாத்திற்கு முந்திய அரேபியர்களான யோனர்களின் பயன்பாட்டுக்கென பண்டுகாபயன் தமது தலைநகர் அனுராதபுரத்திற்கு அருகாமையில் நிலம் ஒதுக்கியிருந்தமை. தேச சஞ்சாரிகளான இத்ரிஸி,இபுனு பதூதா முதல் 1915-ன் கம்பளை கலவரம் வரை திகட்டாத அறிவின் பொக்கிஷமாக வரலாற்று சேதிகளை தாங்கி நிற்கும் அரிய பெட்டகம் இது.

பல அரிய தொண்டு, சேவைகளை, அர்ப்பணிப்பினை இம்மண்ணுக்காக, ஆட்சியாளருக்காக செய்த நம் முதுசங்களின் எச்சங்கள் இம்மண்ணையும் நம்ண சமூகத்தையும் உயிர்ப்பு கொள்ள செய்யும் தகவல்கள் படிமங்கள்,ஆதர்சனமாக இந்நூலின் பக்கங்கள் தோறும் நம்மை வீர்யம் கொள்ள செய்வதோடு மேன்மை கொள்ள செய்கிறது. ஒவ்வொருவரும் வாசித்து பாதுகாக்கவேண்டிய அரிய வரலாற்று நூல்.

- முற்றும்-

# சவூதி அரேபிய தூதுவராலயம், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து நடாத்தும் தேசிய ரீதியான அல்குர்ஆன் மனனப் போட்டி

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

*இலங்கையிலுள்ள சவூதி அரேபிய தூதுவராலயம் மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆகியன இணைந்து தேசிய ரீதியிலான அல்குர்ஆன் மனனப் போட்டியினை இரண்டாவது தடவையாக நடாத்துவதற்குத் தீர்மானித்திருப்பதாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் தெரிவித்தார்.*

*இப்போட்டியானது எதிர்வரும் 2025 ஜனவரி மாதமளவில் கொழும்பில் நடாத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*சனிக்கிழமை (16) முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வெளியிடப்பட்ட சுற்று நிரூபத்தின்படி, இப்போட்டிகள் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அரபுக் கல்லூரிகள், ஹிப்ழுல் குர்ஆன் மத்ரஸாக்கள் மற்றும் அரச பாடசாலைகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் ஆகியவற்றினை மையப்படுத்தி ஆண், பெண் இருபாலாருக்கும் நான்கு பிரிவுகளாக நடாத்தப்படும். ஒவ்வொரு பிரிவிலும் வெற்றிபெரும் போட்டியாளர்கள் சவூதி அரசினால் பெறுமதியான பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுவர்.*

*மேற்படி போட்டியில் பங்குபற்றுவதற்குத் தகுதியான போட்டியாளர்களை தெரிவு செய்யும் ஆரம்பக்கட்டப் போட்டி 2024 டிசம்பர் மாத ஆரம்பப் பகுதியில் பிராந்திய ரீதியாக நடாத்தப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

*பிராந்திய போட்டிகள் பின்வருமாறு நடைபெறும்.*

*பிராந்தியம்: மேற்கு,*
*உள்ளடக்கப்படும் மாவட்டம்: கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, போட்டி நடைபெறும் நிலையம் : கொழும்பு*

*பிராந்தியம்: மத்தி,*
*உள்ளடக்கப்படும் மாவட்டம் : கண்டி, நுவரெலியா, மாத்தளை, பதுளை, கேகாலை, மொனராகலை,*
*போட்டி நடைபெறும் நிலையம் : கண்டி*

*பிராந்தியம்: கிழக்கு,*
*உள்ளடக்கப்படும் மாவட்டம் : அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, பொலன்னறுவை,*
*போட்டி நடைபெறும் நிலையம் :மட்டக்களப்பு*

*பிராந்தியம் : வடமேற்கு,*
*உள்ளடக்கப்படும் மாவட்டம் :குருணாகல், புத்தளம், அனுராதபுரம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம்,*
*போட்டி நடைபெறும் நிலையம் :குருணாகல்.*

*போட்டிகள் கீழ்வரும் பிரிவுகளில்*




*நடைபெறும்.*

*பிரிவு - 01, அல்குர்ஆன் முழுவதும் ஆரம்ப ஸூரா ஸூரத்துல் பகரா முதல்*
*(1 முதல் 30 வரையான ஜூஸ்உகள்)*
*வயது: ஆண்-பெண் 15 - 23,*

*பிரிவு - 02, ஆரம்ப ஸூரா ஸூரத்துல் பகரா முதல் ஆரம்ப பத்து ஜூஸ்உகள்*
*(1 முதல் 10 வரையான ஜூஸ்உகள்)*
*வயது: ஆண்-பெண் 12 - 20,*

*பிரிவு - 03, ஆரம்ப ஸூரா ஸூரத்துல் பகரா முதல் ஆரம்ப ஐந்து ஜூஸ்உகள்*
*(1 முதல் 05 வரையான ஜூஸ்உகள்)*
*வயது:ஆண்-பெண் 10 - 15,*

*பிரிவு - 04, ஆரம்ப ஸூரா ஸூரத்துல் பகரா முதல் இறுதி இரண்டு ஜூஸ்உகள்*
*(ஜ/ஸ்உ அம்ம, ஜ/ஸ்உ தபாரக)*
*வயது:ஆண்-பெண் 07 - 12,*

*போட்டியின் நிபந்தனைகளாக, போட்டியாளர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட அரபுக் கல்லூரி, ஹிப்ழ் குர்ஆன் மத்ரஸா அல்லது அரச பாடசாலைகளில் அல்லது அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் கல்வி கற்பவராக இருத்தல், ஒரு போட்டியாளர் ஒரு பிரிவில் மாத்திரமே கலந்துகொள்ள முடியும், போட்டியாளர்கள் ஏதாவது ஒரு சர்வதேசப் போட்டியில் ஏற்கனவே கலந்துகொள்ளாதவராகவும், கடந்த 2023 ஆம் ஆண்டு சவூதி தூதரகத்தால் நடாத்தப்பட்ட போட்டியில் கலந்துகொண்டு பரிசு பெறாதவராகவும் இருத்தல் வேண்டும், விண்ணப்பதாரிகளின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், அடையாள அட்டை ஃ செல்லுபடியாகும் கடவுச் சீட்டின் சான்றுப் பிரதிகள். மேலும், அடையாள அட்டை இல்லாதவர்கள் 2"ஒ2" அளவிலான புகைப்படத்தின் பின்பக்கத்தில் பெயர், முகவரி என்பவற்றை குறிப்பிட்டு, கல்லூரி அதிபர் மூலம் அத்தாட்சிப்படுத்தி போட்டியின் போது சமர்ப்பித்தல் வேண்டும், 2025.01.11 ஆம் திகதியில் போட்டிப்பிரிவுக்குரிய வயது கணிக்கப்படும், போட்டியில் கலந்து கொள்ளும் போட்டியாளர்களுக்கு எவ்வித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது, போட்டி முடிவுகள் தொடர்பாக நடுவர்களின் தீர்மானமே இறுதியானதாகும், போட்டியாளர்கள் திணைக்களத்தின் விதிகளை மீறும் பட்சத்தில் போட்டியில் பங்குபற்றும் தகைமையை இழந்தவராகக் கருதப்படுவர், ஜனவரி மாதம் நடைபெறும் இறுதிப் போட்டிக்கு பிராந்தியத்தில் இருந்து தெரிவு செய்யப்படும் போட்டியாளர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுவர், பிராந்தியங்களில் இருந்து தெரிவுசெய்யப்படும் போட்டியாளர்களின் எண்ணிக்கையை இத்திணைக்களமே தீர்மானிக்கும்.*

*உங்கள் விண்ணப்பங்களை பழழபடந கழசஅ ஊடாக மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். https://forms.gle/qCyTBChMCGxwTyDV7 உரிய விண்ணப்பத்தின் வன் பிரதியினை (Hard copy) போட்டியில் கலந்து கொள்ளும் அன்றைய தினம் சமர்பித்தல் வேண்டும்.*

*குறிப்பு: தபால் மூலம் அல்லது நேரடியாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.*

*விண்ணப்ப முடிவுத் திகதி: 2024.11.30 சனிக்கிழமையாகும்.*

மனநலமும் ஆலோசனையும் 57

# இன்பம் துன்பம் இரண்டும் நிறைந்த பயணம் வாழ்க்கை!

ஏற்றம் இறக்கம் இரண்டும் நிறைந்த பயணம் வாழ்க்கை.

நாம் மகிழ்ச்சியான தருணங்களை வாழ்க்கை பயணத்தில் அனுபவிக்கிறோம்.

எதிர்பாராத சவால்களையும் சந்திக்கிறோம்.

தவிர்க்கமுடியாத பின்னடைவுகளையும் எதிர்கொள்கிறோம்.

ஏற்றுக்கொள்ளவே முடியாத விமர்சனங்களுக்கும் முகம் கொடுக்கின்றோம்.

அழகான அமைதியான வாழ்க்கை வாழும் நல்ல மனிதர்கள் கூட வாழ்க்கையில் இவ்வாறான விடயங்களுக்கு முகம் கொடுக்கின்றனர் என்பது தான் இதில் உள்ள மிகமுக்கியமான விடயம்.

"நல்லவர்களுக்கு ஏன் கெடுதிகள் நடக்கின்றன?" என்ற கேள்வியை கேட்கின்ற பலரை நாம் கண்டிக்கலாம்.

இந்த கேள்விக்கு பதில் தருவது அவ்வளவு இலகுவான விடயமல்ல.

வாழ்க்கையின் உண்மை என்னவென்றால்இ கெடுதியான அல்லது மோசமான விடயங்கள் யாருக்கும் நடக்கலாம். எப்போது வேண்டுமானாலும் நடக்கலாம். நல்லவருக்கும் நடக்கலாம்.

அது ஏன் என்பதைப் புரிந்துகொள்வது பெரும்பாலும் கடினமானது.

கெடுதிகளை, து எப்படி மன உறுதியுடன் வாழ்வது என்பதை சோதித்து பார்ப்பது வாழ்க்கையின் ஒரு முக்கிய கருவாக இருப்பது ஒரு காரணமாகலாம்.

வாழ்க்கை ஏற்றத் தாழ்வுகள் நிறைந்ததுஇ எதிர்பாராத விடயங்களால் தொடர்புபட்டது. வாழ்க்கையில் எப்போதும் நல்லவை மட்டுமே நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. மரணம் எப்படி எப்போது வரும் என்று எமக்கு தெரியாதது போல சில எதிர்பாராத நிகழ்வுகள் தெரியாமலேயே வரலாம். ஆனால் வாழ்க்கையில் எது நடந்தாலும் நாம் எதற்கும் முகம் கொடுக்கும் மனப்பான்மையை கடைப்பிடிக்கத் தயாராக இருக்க வேண்டும்.

எங்களால் கட்டுப்படுத்தக்கூடியவற்றில் கவனம் செலுத்துவதன் மூலமும்.

மன தைரியத்தை உருவாக்குவதன் மூலம்...

உணர்ச்சிகளை சரியாக பயன்படுத்துவதன் மூலமும்.

தேவைப்படும்போது உதவிகள் தேடுவதன் மூலமும்.

வாழ்க்கையில் சந்திக்கும் சங்கடங்களை, சவால்களை, ஏற்ற இறக்கங்களை, பின்னடைவுகளை அழகாக வழிநடத்தும் ஆற்றலை பெற்றுக் கொள்வதன் மூலமும் அழகான வாழ்க்கையை உருவாக்கலாம்.

நினைவில் கொள்வோம் தோல்விகளையும் பிரச்சினைகளையும் கண்டு பின்னடையாமல் இருப்போம்.

எப்பொழுதும் நம்பிக்கையுடன் இருப்போம்.

தீர்வுகள் இல்லாமல் எதுவும் இல்லை என்று நம்புவோம்.

விடாமுயற்சியுடனும் நேர்மறையான அணுகுமுறையுடனும் தடைகளைக் கடந்துஇ துன்பங்களை எதிர்கொண்டு வாழும் வாழ்க்கையில் தான் திருப்தி இருக்கிறது என்ற உண்மையை உறுதியாக ஏற்றுக் கொள்வோம்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

---





பயாஸா பாஸில்



# விடுதலை

பயாஸா பாஸில்
கஹட்டோவிட்ட

எப்போதும் காதுகளுக்குள் ஸ்மார்ட் போனை வைத்துக் கதைத்துக் கொண்டிருக்கும் சுஹைப்பிற்கு வஜீராவைப் பற்றி நினைக்க நேரமேயிருக்காது.

ஆனால், வஜீராவோ சுஹைப்பிற்கு தேவையானதை பார்த்துப் பார்த்து செய்வதில் தன் வாழ்க்கை முழுவதும் அர்ப்பணித்திருந்தாள்.

தனக்கு ஒரு பிள்ளை வேண்டுமென்பதில் கூட ஈடுபாடற்றவனாக சுஹைப் இருந்தாலும்.. வஜீரா பல தடவை ஏங்கியதுண்டு.. அதற்காய் பக்கத்து வீட்டுக் குழந்தைகளை கொஞ்சி விளையாட முடியுமாயென்ன..!!

சுஹைப்பின் சுபாவம் அறிந்தே அவள் பணி செய்வாள்.வாழ்வாள்.

சுஹைப் வேலையிலிருந்து வரும் போது சாப்பாடு மேசை மீது தயாராக இருக்க வேண்டும்.. குளித்து முடித்து வருகையில் உணவு சுடச்சுட பரிமாறப்பட வேண்டும். அதற்காக வஜீரா தயார் நிலையில் இருக்க வேண்டும்.

கொஞ்சம் தாமதித்தாலோ மேசை மேல் இருக்க வேண்டிய உணவுகள் கீழே இருக்கும்..

சேர்ட் , ட்ரொவ்ஸர் எல்லாம் அயன் பண்ணி ஹென்ங் பண்ணப்பட்டு இருக்க வேண்டும். சூ போலிஷ் பண்ணி பள பள என்றிருக்க வேண்டும். ஆடைகளில் ஒரு துளியேனும் கறை இருக்கவே கூடாது..

வீட்டில் வேலைக்கு இருவர். தோட்டக்காரர்.. தோட்டத்தை பராமரிப்பது , கடைக்குச் சென்று காய்கறி வாங்கி வருவது எல்லாம் அவர் வேலை.

வீட்டில் வேலைக்கு இருக்கும் பெண் வஜீராவிற்கு உதவியாக இருப்பாள். ஆனால், சுஹைபின் வேலைகள் அனைத்தும் வஜீராவின் மூலம் நடந்தாக வேண்டும். என்பது சுஹைபின் கண்டிப்பான கட்டளை.

இப்படியாக எல்லா விதத்திலும் பேர்பெக்ட் ஆக இருப்பவனுக்கு ஏற்றவளாக இருப்பதையே வரமாய் நினைத்து நாளுக்கு நாள் தன்னை கவனிப்பதை விட்டு.. சுஹைப்பிற்காகவே நாட்களை கடத்தினாள்.. தன்னை கவனிப்பதை மறந்தே .. இல்லை வேண்டுமென்றே மறுத்திருந்தாள்.

வஜீரா சாப்பிட்டாளா? என்று கேட்க யாருமில்லை. அழகாக ஆடை அணிந்தாளா..? என்று ரசிக்க சுஹைப்பிற்கு நேரமில்லை. எங்காவது சென்று வந்தாளா..?? இப்படி வஜீராவைப் பற்றி சுஹைப்பிற்கு எந்தக் கவலையுமில்லை.. எப்போதும் பணம் பணம் பணம் தான்..

பணமே வாழ்க்கையாகிப் போன அவன் வாழ்வில் வஜீரா பணயக்கைதி தான்.

ஒரு நாள் வெளியே செல்ல அழகாக உடுத்தி , தலை சீவிக் கொண்டிருந்த சுஹைபை பார்த்து.,

'என்னங்க.. என்னங்க..'

என்று பேசினாள் வஜீரா..

"என்ன .. இப்ப என்ன வேணும் உனக்கு.."

என்று கோவமாகக் கேட்டான் சுஹைப்.

" இல்ல.. அது வந்து.. இண்டக்கி எங்காவது வெளியில போவோமா..? நாங்க கலியாணம் முடிச்சி 1 வருஷமாகுது."

"அதுக்கு"

"எங்கயாச்சும் கூட்டி போறீங்களா.."

என்று கேட்டதுதான் தாமதம்.. பளாரென்று ஒரு அறை விழுந்தது.

"ஏண்டி நான் சொல்றத கேட்டு நடக்க வேண்டிய அடிம நீ எனக்கே ரிக்குவஸ்ட் பண்றியா.." என்று சீறிப்பாய்ந்தான்.

ஆரோக்கியமற்று இருந்த வஜீராவின் உடல் எதிர்பாரா விதமாய் விழுந்த அறையை எதிர்கொள்ள முடியாமல், பேச்சற்று மயங்கி விழுந்தாள் வஜீரா..

சற்றேனும் அவளைப் பற்றி பொருட்படுத்தாது அவளைக் கடந்து வேலைக்குப் போனான்..

வேலைக்குப் போய் ஒரிரு மணித்தியாலம் கடந்திருக்கும். மஸ்ஜிதில் ஒரு அறிவித்தல் ..

சுற்று வட்டாரத்தில் இருந்த ஊழியர்கள் அனைவரும் சுஹைப்பையே வெறித்துப்பார்த்தனர்..

சுஹைப் யாரின் முகத்தையும் பார்க்க முடியாதவனாய் கூனிக்குறுகி நின்றான்..

அடிமை விடுதலை பெற்றுவிட்டாள்!!

---

# வாழ்வில் மகிழ்ச்சியின் ரகசியம் என்ன?

வாழும் நொடிகளை கொண்டாடுவது தான் வாழ்க்கையின் இரகசியமாகும் .

கடந்த காலத்தில் மிக அற்புதமான மனிதர்களை நாங்கள் கண்டிருக்கலாம். மிக அழகான நாட்களை நாங்கள் கடந்து வந்திருக்கலாம்.

ஆயினும், அந்த நினைவுகளை மொத்தமாகக் கலந்து ஒரு தேனீர் கோப்பையில் போட்டு உறிஞ்சியவாறு இப்போது, இந்த நாளை, இந்த நொடியை கொண்டாடுவதில்தான் மகிழ்ச்சியின் வெற்றி தங்கி இருக்கின்றது.

நமக்கு ஒரு பைத்தியம் இருக்கின்றது. எப்போதும் எமக்குக் கிடைக்காமல் போனவற்றின் காதலர்களாகத்தான் நாங்கள் இருப்போம். நாம் இழந்தவற்றை தான் எண்ணி ஒப்பாரி வைத்துக் கொண்டிருப்போம். எப்போதுமே நமக்கு அக்கரைதான் பச்சை.

இப்போது நமக்கு கிடைத்திருப்பது அல்லாஹ்வின் தெரிவு. அதை கொண்டாடலாமே!

- Nafeel Abafeel -

# 12 வருடங்களின் பின்னர் கருப்புப் படைக்கு எதிராக ஒருநாள் தொடரை வென்ற சிங்கப்படை





அரபாத் பஹுர்தீன்

கண்டி பல்லோகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற நியூசிலாந்து அணிக்கு எதிரான 2ஆவது ஒருநாள் போட்டியில் குசால் மெண்டிஸின் பொறுப்பான துடுப்பாட்டத்தின் உதவியால் டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்ற இலங்கை அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் ஒரு போட்டி மீதமிருக்க தொடரை 2:0 என 12 வருடங்களின் பின்னர் கைப்பற்றி வரலாறு படைத்தது. இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்று தொடரில் 1:0 என முன்னிலை பெற்றிருந்தது. இந்நிலையில் தொடரின் தீர்மானிக்க 2ஆவது போட்டி நேற்று (17) பகலிரவு ஆட்டமாக கண்டி பல்லோகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை நியூசிலாந்து அணிக்கு வழங்கியிருந்தது. அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு மத்திய வரிசை வீரரான சப்மேன் 76 ஓட்டங்களை பெற்றதுடன், ஹோய் 49 ஓட்டங்களைப் பெற மழை காரணமாக 47 ஓவர்கள் மட்டுப் படுத்தப்பட்டிருந்த இப் போட்டியில் 45.1 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இலங்கை அணி சார்பில் பந்துவீச்சில் தீக்சன மற்றும் வெண்டர்சே ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்கள் வீதம் வீழ்த்தினர். பின்னர் வெற்றி இலக்கான 210 ஓட்டங்களை நோக்கி பதிலுக்கு களம் நுழைந்த இலங்கை அணிக்கு சீரான இடைவெளியில் விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டது. இருப்பினும் 3ஆம் இலக்கத் துடுப்பாட்ட வீரரான குசால் மெண்டிஸின் தனி ஆளாய் களத்திலிருந்து ஓட்டங்களை சேர்த்து நம்பிக்கை கொடுத்ததுடன் ஆட்டமிழக்காமல் 74 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்ததுடன், இவருடன் 8ஆவது விக்கெட்டில் இணைந்து கொண்ட மகேஷ் தீக்சன ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க 46 ஆவது ஓவரில் 7 விக்கெட்டுகளை இழந்து 210 ஓட்டங்களைப் பெற்று 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. பந்துவீச்சில் பிரேஸ்வெல் 4 விக்கெட்டுக்களை அள்ளிச் சுருட்டினார். இந்த வெற்றியின் மூலம் இலங்கை அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் ஒரு போட்டி மீதமிருக்க தொடரை 2:0 என வென்றெடுத்து முன்னிலை பெற்றுள்ளது. மேலும் நியூசிலாந்து அணிக்கு எதிராக ஒருநாள் தொடரை 12 வருடங்களுக்கு பின்னர் கைப்பற்றி வரலாற்றை மாற்றியெழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## இறுதி ஆட்டம் மழையால் கைவிடப்பட தொடரை வென்றது இலங்கை

### கன்னி விக்கெட்டை கைப்பற்றினார் சிறாஷ்

நியூஸிலாந்து அணிக்கு எதிரான 3ஆவதும், இறுதியுமான ஒருநாள் போட்டி கடும் மழை காரணமாக முழுமையாகக் கைவிடப்பட்டிருக்க, 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை இலங்கை அணி 2:0 என கைப்பற்றியது. இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் இரு போட்டிகளிலும் இலங்கை அணி வெற்றி பெற்று 12 வருடங்களின் பின்னர் நியூசிலாந்து அணிக்கு எதிராக ஒருநாள் தொடரை வெற்றி கொண்டிருந்தது. இந்நிலையில் நேற்று (19) இடம்பெற்ற 3ஆவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 5 மாற்றங்களை செய்திருந்தது.

அதற்கமைய பெத்தும் நிசங்க, குசல் மெண்டிஸ், கமிந்து மெண்டிஸ் அஷித பெர்ணான்டோ ஆகியோருக்கு ஓய்வு வழங்கப்பட்டு அவர்களுக்கு பதிலாக நுவணிந்து பெர்ணான்டோ, நிஷான் மதுஷ்க மொஹமட் சிறாஷ் மற்றும் அறிமுக வீரராக சமிந்த விக்ரமசிங்க ஆகியோர் களம் கண்டிருந்தனர்.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அதற்கமைய களம் நுழைந்த நியூஸிலாந்து அணியின் ஆரம்ப வீரரான றொபின்ஷனின் விக்கெட்டை சிறாஷ் கைப்பற்றி தனது முதல் சர்வதேச விக்கெட்டாகப் பதிவு செய்து கொண்டார். இருப்பினும் சொற்ப ஓட்டங்களில் முதல் விக்கெட் வீழ்த்தப்பட்டாலும், 2ஆவது விக்கெட்டில் இணைந்து கொண்ட யங் (56) மற்றும் நிக்ல்ஸ் (46) ஜோடி அணியின் ஓட்ட வேகத்தை அதிகரிக்க யங் அரைச் சதம் கடந்து அசத்தினார்.

ஒரு கட்டத்தில் நியூசிலாந்து அணி 21 ஓவர்களில் 1விக்கெட்டினை இழந்து 112 ஓட்டங்களை பெற்றிருக்க மழை குறுகிகிட்டது. தொடர்ந்தும் மழை பெய்தமையால் போட்டி கைவிடப்பட்டதாக நடுவர்கள் அறிவித்தனர். இதனால் இலங்கை அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2:0 என வெற்றி கொண்டு அசத்தியது. இத் தொடரின் நாயகனாக 2 போட்டிளில் 217 ஓட்டங்களை பெற்ற குசல் மெண்டிஸ் தெரிவானமை குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்தை விரட்டியடித்த மேற்கிந்தியத் தீவுகள்



சுற்றுலா இங்கிலாந்து அணிக்கு எதிரான 4ஆவது இருபதுக்கு இருபது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 5 போட்டிகள் கொண்ட ரி20 தொடரின் முதல் 3 போட்டிகளிலும் இங்கிலாந்து அணி தொடரை ஏற்கனவே வெற்றி கொண்டிருக்க 4ஆவது போட்டி 17ஆம் சென் லூசியாவில் இடம்பெற்றது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தேர்ந்தெடுத்தது. அதற்கமைய முதலில் துடுப்பாடிய இங்கிலாந்து அணி பெத்தல் பெற்றுக் கொடுத்த ஆட்டமிழக்காத 62 ஓட்டங்கள் மற்றும் சோல்ட் பெற்றுக் கொடுத்த 55 ஓட்டங்களில் உதவியுடன் 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 218 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் மோட்டி 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பின்னர் இங்கிலாந்து அணியால் நிர்ணயிக்கப்பட்ட 219 ஓட்டங்கள் என்ற மிகப் பெரிய வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி அணி லிவிஸ் (68) மற்றும் ஹோப்ஸ் (54) ஆகியோரின் அதிரடி அரைச் சதங்களின் உதவியுடன் 19 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 221 ஓட்டங்களைப் பெற்று 5 விக்கெட்டுகளால் இலகு வெற்றியைப் பதிவு செய்தது. பந்துவீச்சில் ரெஹான் 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட ரி20 தொடரை 3:1 என இங்கிலாந்து அணி வெற்றி கொண்டிருக்க, 5ஆவதும் இறுதியுமான போட்டி நாளை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜாக் ஹிங்கர்ட்டினின் இறுதி நிமிட அசத்தல் கோலால் ஏமனை வீழ்த்தி வரலாறு படைத்தது இலங்கை



பலமிக்க ஏமன் அணிக்கு எதிரான உதைப்பந்தாட்ட போட்டியில் 89 ஆவது நிமிடத்தில் ஜாக் ஹிங்கர்ட்டின் தலையால் முட்டி கோலை அடிக்க 1:0 என்ற கோல் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது இலங்கை அணி. உலக நட்புறவு உதைப்பந்தாட்ட தொடரின் அங்கமாக இடம்பெற்ற இலங்கை உதைப்பந்தாட்ட அணிக்கும், ஏமன் அணிக்கும் இடையிலான முதல் சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் கட்டார் டோஹாவிலுள்ள அல் கோர் மைதானத்தில் இடம்பெற்றது. இலங்கை நேரப்படி (17) இரவு 9.45 மணிக்கு ஆரம்பித்தது. போட்டியின் ஆரம்பம் முதல் விறுவிறுப்பிற்குப் பஞ்சமின்றி இடம்பெற்றது. இதனால் முதல் பாதி கோல்கள் இன்றி சமநிலை பெற்றது.

பின்னர் தொடர்ந்த 2ஆவது பாதி ஆட்டத்திலும் இரு அணி வீரர்களும் கோலுக்கான முயற்சியில் தீவிரம் காட்டினர். இருப்பினும் இரு அணிகளின் தடுப்பு வீரர்கள் மற்றும் கோல் காப்பாளர்களின் அசத்தலால் இரு அணிகளாலும் கோல் கணக்கை ஆரம்பிக்க முடியவில்லை. இருப்பினும் போட்டியின் இறுதி நிமிடங்களில் இலங்கை வீரர்கள் தீவிரம் காட்ட போட்டியின் 89ஆவது நிமிடத்தில் கம்பம் நோக்கி அடிக்கப்பட்ட பந்தை உயரே எழுந்த ஜாக் ஹிங்கர்ட்டின் தலையால் முட்டி கம்பம் அனுப்ப போட்டி நிறைவு பெற்றதாக நடுவர் அறிவிக்க பலமிக்க ஏமன் அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி வரலாற்று சிறப்புமிக்க வெற்றியை பதிவு செய்தது இலங்கை அணி.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.